# களவாடப்பட்ட
# பூமியின் கதை

- பலஸ்தீன பயண அனுபவங்கள் -

றிப்தி அலி




# சமர்ப்பணம்

சொந்த பூமியில் சுதந்திரத்தை இழந்து,
உரிமைக்காக போராடி சதா தங்களது உயிரை
பறிகொடுத்துக்கொண்டிருக்கும் பலஸ்தீன
உறவுகளுக்கு இந்நூல் சமர்ப்பணம்.



| | |
|---|---|
| **Title** | : Kalavadappata Pumiyin Kathai (The story of theft of the Earth) |
| **Medium** | : Tamil |
| **Author** | : A.A.M. Rifthi Ali |
| **Publication** | : TR Media Networks |
| **Designing** | : Firows Mohamed |
| **Printers** | : Perfect Printers |
| **Price** | : Rs. 200 |
| **Pages** | : VII + 46 (53) |
| **Copies** | : 1000 |
| **First Edition** | : © 2016 |
| **ISBN** | : 978-955-4054-00-4 |





I take this opportunity to convey my best wishes to Mr. Rifthi Ali on the launch of his book containing articles of his visit to the State of Palestine, which gives one an insight into the many aspects of Palestinian life with details of the main cities and especially Al Quds and Baithul Muqadis.

I wish him all success in this endeavor, which gives the reader an idea of the struggle the people and leadership of Palestine go through on a daily basis.

We hope God Willing; we will celebrate together in the future in Al Quds (Jerusalem), our Capital in a Liberated Palestine

With all my best wishes.

**H.E. Mr. Zuhair H. Dar Zaid**
**Ambassador of the State of Palestine**

# நான் உன்னை அதிகம் நேசிக்கிறேன்

*உன்பொருட்டு எவ்வளவு அதிகம் போரிடுகிறேனோ*
*அவ்வளவு அதிகம் நான் உன்னை நேசிக்கிறேன்*
*இந்த கஸ்தூரியின், பொன்னின் பூமியைத் தவிர*
*வேறு எந்தப் பூமி*
*இந்த அடிவானத்தைத் தவிர*
*வேறு எது என் உலகை தீர்மானிப்பது?*
*உன்னை உயர்த்தும்போது*
*என் வாழ்வின் கிளை மேலும் பசுமையாகிறது*
*ஓ பலஸ்தீன்...*
*என் சிறகு சிகரங்களுக்கு மேலால் விரிகிறது.*

*எலுமிச்சை மரம் எமது கண்ணீரால் வளர்க்கப்பட்டதா?*
*உயர்ந்த பைன் மரங்களுக்கிடையே*
*பறவைகள் பறக்கவில்லை*
*காமல் குன்றுக்குமேலே*
*நட்சத்திரங்கள் கண்காணிப்புடன் பார்க்கவில்லை*
*சிறிய பூம்பாத்திகள் எமக்காக அழுகின்றன*
*தோட்டங்கள் வெறிச்சோடிப் போயுள்ளன*
*திராட்சைகள் துன்பத்தில் மூழ்கியுள்ளன*

*உன் பெயர் என் காதில் ஒலிக்கும்போதெல்லாம்*
*என் சொற்கள் அதிக கவித்துவம் பெறுகின்றன*
*ஒவ்வொரு வாயிற்படியிலும்*
*உன் மீதான ஆவலை அவை விதைக்கின்றன*
*ஒவ்வொரு பாலைவனத்திலும் புகலிடத்திலும்*
*இச்சொற்களால் ஒளியேற்ற முடியுமா?*

*ஓ பலஸ்தீன்...*
*உன்னை விட அழகியது எதுவுமில்லை*
*உன்னை விடப் பெறுமதியானது எதுவுமில்லை*
*உன்னை விடத் தூயது எதுவுமில்லை*
*உன் பொருட்டு எவ்வளவு அதிகம் போரிடுகிறேனோ*
*அவ்வளவு அதிகம் நான் உன்னை நேசிக்கிறேன்!*

இந்தக் கவிதை 'அபூ சல்மா' என்ற புனைப்பெயரில் எழுதும் அப்துல் கரீம் அல்கர்மி யினுடையது. இவர் பலஸ்தீனத்தின் 'ஒலிவ் மரம்' என அழைக்கப்பட்டவர். பலஸ்தீனப்

பிரச்சினைகள் பற்றி பல்வேறு கவிதைகளை இவர் எழுதியுள்ளார். ஈழத்தில் தமிழ் வாசகர்களுக்கு பலஸ்தீன பிரச்சினைகளையும் பலஸ்தீனக் கவிதைகளையும் அறிமுகப் படுத்தியதில் பேராசிரியர் நுஃமான் அவர்களுக்கு பெரும் பங்குண்டு. 1981இல் முதன் முதல் பலஸ்தீனக் கவிதைகள் என்ற அவரது மொழிபெயர்ப்பு கவிதைகள் வெளிவந்தன. இப்போது அதனது மூன்றாம் பதிப்பும் வந்துவிட்டது.

போராட்டக் கவிதைகளை தமிழுக்கு அறிமுகப்படுத்தியதில் நுஃமான் மிக முக்கியமானவர். அதேநேரம் போராட்ட உணர்வுகளுக்கும் பலஸ்தீன் நல்லதோர் உதாரணமாகும். நான் உயர்தர வகுப்பில் கற்கிறபோது அரசியலிலே அரசு ஒன்று உருவாவதற்கான நிபந்தனைகளாக மக்கள் தொகை, ஆட்புலம், இறைமை, அரசாங்கம் என்பனவற்றைக் கூறுவார். ஆனால், இவை அனைத்தும் இருந்தும் சர்வதேச அங்கீகாரம் இல்லாமல்தான் பலஸ்தீனம் திண்டாடுகிறது.

அந்த நாட்டைப் பற்றித்தான் - அந்த நாட்டுக்கு சென்று வந்த நண்பர் றிப்தி அலி அவர்கள், இந்தக் 'களவாடப்பட்ட பூமியின் கதை'யை எழுதியிருக்கிறார். முன்னர் அமெரிக்காவுக்கு சென்றுவந்து அத்தகைய பயண அனுபவத்தை நூலாக தந்த அவர் இப்போது பலஸ்தீன பயண அனுபவத்தை இந்த நூல் மூலம் நமக்கு சொல்லியிருக்கிறார். அவர் பயணித்து சுமார் மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. இதற்குள்ளும் பலஸ்தீன அரசியலில் பல மாற்றங்கள் நிகழ்ந்திருக்கக் கூடும். ஆனால், பலஸ்தீனத்தை பற்றிய அடிப்படைத் தகவல்களை இந்நூல் வெளிப்படுத்தியிருக்கின்றது.

பயணக் கட்டுரைகள் உண்மையில் ஒரே மூச்சில் வாசித்து முடிக்கக்கூடிய சுவைமிக்கவை. அந்த ஓட்டம் இந்த நூலுக்கும் இருப்பது மகிழ்ச்சி தருகிறது. சிலவேளைகளில் சில பயணக் கட்டுரைகள் அந்நாட்டுக்குள் இருக்கிற அடிப்படைப் பிரச்சினைக்குள் நுழைந்து வெளிப்படும் அல்லது ஒரு கொள்கை ஊடாட்டத்திற்குப் பின்னாலே செல்லும். எனக்கு நல்ல ஞாபகம் இருக்கிறது வைரமுத்து எழுதிய 'வடுகப்பட்டி முதல் வால்கா' வரை என்ற நூலுக்கு பதிலாக சம்மாந்துறையிலிருந்து அஸர்பைஜான் வரை என்ற மாற்றுக் கருத்துக்கள் கொண்ட நூலொன்று வந்தது. இசங்களின் விமர்சனத்தோடு சமய அணுகு முறையோடு மிகக் காத்திரமாக இந்நூல்கள் மோதிக்கொண்டன. இப்பயணக் கட்டுரைகள் இவ்வாறு சிலவேளைகளில் மிகக் கவனத்தை பெறுவதுமுண்டு.

பிறிதொரு நாட்டிற்குள் நுழைந்து வெளியேறுவது என்பது மிகக் கஷ்டமான விடயம் தான். ஆனால், பலஸ்தீனத்திற்குள்ளே சென்று வெளியே வந்த இந்த அனுபவங்கள் நமக்கு பல்வேறு படிப்பினைகளையும் செய்திகளையும் கொண்டு வந்திருக்கின்றன. அந்த நாட்டுக்குள் நுழைவது என்பதே நினைத்துப்பார்க்க முடியாத காரியம். அந்த மக்கள் ஒரு திறந்த வெளிச்சாலையில் அடைக்கப்பட்டிருக்கின்ற பரிதாபத்தினை இந்நூலின் ஆசிரியர் மிக லாவகமாக வெளிப்படுத்தியுள்ளார். பலஸ்தீனத்திற்குள் விஜயம் செய் வதை தடுப்பதற்காக இஸ்ரேலியர்கள் வெளிநாட்டவர்களுக்கு பல இன்னல்களை செய் வார்கள். ஆனால் பலஸ்தீனியர்கள் மற்றவர்களுக்குப் பல உதவிகளை செய்வார்கள். அவர்களை மற்றவர்கள் வந்து பார்க்க வேண்டும் என்பதற்காக. ஆனால், அதே பலஸ்தீனியர்களின் உணர்வு இப்படி இருந்ததை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார்.

'நாங்கள் அனைவருக்கும் உதவி செய்வோம். ஆனால் எங்களுக்கு உதவி செய்ய யாருமில்லை' என்பார்கள். இந்த உலகம் எல்லாவற்றையும் மறந்து அதிகாரங்களுக்குக் கட்டுப்பட்டிருப்பதை பலஸ்தீனிய பிரஜைகள் நன்கு உணர்ந்திருக்கிறார்கள் என்பதைத் தான் இந்தப் பயண அனுபவத்தின் அடி இழை நமக்கு சொல்கிறது.

பலஸ்தீனத்தின் தந்தை யாசீர் அரபாத்தின் வருகை முதலான முக்கியமான அம்சங்கள் இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளன. பலஸ்தீனத்திற்குரிய வரலாற்றுச் சிறப்பு இந்நூலில் பல இடங்களில் விபரிக்கப்படுகிறது. இஸ்லாமிய வரலாற்றோடு அது இணைந்திருக்கிற பாங்கு விரிவாக சொல்லப்பட்டு இருக்கிறது. அதிகமான நபிமார்கள் இந்த நாட்டிலேதான் பிறந்து வளர்ந்திருக்கிறார்கள். பலர் இங்கு அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அதேநேரம் யூதர்களுடைய ஆக்கிரமிப்பும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுடைய கொடுமை, அவர்கள் செய்த இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகள், அந்த இராணுவம் பலஸ்தீன சிறுவர்களை சீண்டும் விதம் இவையெல்லாமே இந்த நூலில் விபரிக்கப்பட்டிருக்கின்றது.

அடி மனதில் சோகம் இழையோட இந்த நூலை வாசித்து முடிப்பதற்குள் ஒவ்வொரு முஸ்லிமின் ஈமானிய உள்ளத்தையும் தீண்டுகின்ற முஸ்லிம்களின் முதல் கிப்லா அல் அக்ஸாவின் செய்தி வருகிறது. கிறிஸ்தவர்களின் பெத்லஹேமின் வரலாறும் இந் நூலில் தொடப்பட்டிருக்கிறது. ஒரு போராட்டம் நடக்கிற பூமியின் ஒழுங்கு முறைகளை இந்நூலை வாசிக்கிறபோது அறிந்துகொள்ள முடிகிறது. அங்குள்ள மக்களின் வறுமையினை பர்வேஸ் அழகாகச் சொல்கிறான். படிக்கின்ற ஆண்களினது பல்கலைக்கழகமாகச் சிறைச்சாலையும் அதிகம் கல்வி கற்கின்றவர்களாக இருக்கின்ற பெண்களின் செய்திகளும் மக்களின் அக - புற, இன்ப - துன்பங்களும் இந்நூலில் இழையோடி இருக்கின்றது.

ஒரு பயணக் கட்டுரைக்குரிய சுவை இந்நூலில் இல்லாமலில்லை. ஒரு மூச்சோடு இந்த அனுபவத்தை வாசிக்க முடிந்திருக்கின்றது. றிப்தி அலியிடம் நல்ல பயணக் கட்டுரையாளராக பரிணமிக்கக்கூடிய காத்திரமான அடையாளங்கள் தெரிகின்றன. அதுசார்ந்த அரசியலுக்குள்ளும் கொள்கைகளுக்குள்ளும் நுழைந்து செல்கிறபோது இன்னும் பல செய்திகளை இந்நூல் நமக்கு சொல்லலாம். எப்படியிருந்தாலும் தமிழில் பயணக் கட்டுரையாளர்களுக்குள் றிப்தி அலியைக் குறைத்து மதிப்பிட முடியாது. கல்முனையிலிருந்து அமெரிக்காவினதும் பலஸ்தீனத்தினதும் செய்திகளை நமக்கு சொல்லித் தருவதற்கு றிப்தி அலி முனைந்திருக்கிறார். அவரது முனைப்பு இன்னும் பல திசைகளுக்கு செல்ல வேண்டும். அதன் மூலம் இன்னும் பல பயனுள்ள நூல்கள் கிடைக்க வேண்டும். அவருக்கு நமது வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும் என்றும் உண்டு.

**பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ்**
தல்லவர் – மொழித்துறை
தென் கிழக்குப் பல்கலைக்கழகம்

# முன்னுரை

களவாடப்பட்ட பூமியின் கதை எனும் எனது பலஸ்தீன அனுபவ பகிர்வான இந்த நூல் எனது இரண்டாவது படைப்பாகும். கடந்த 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை பலஸ்தீனுக்கு ஒரு வார கால விஜயமொன்றை மேற்கொண்டிருந்தேன்.

முஸ்லிம்களின் முதல் கஃபாவான அல்அக்ஸா அமைந்துள்ள இந்த நாட்டுக்கு பயணம் செய்வதென்பது இலகுவான ஒரு விடயமன்று. இந்த நிலையில் அந்த நாட்டிற்கு செல்வதற்கான சந்தர்ப்பத்தினை ஏற்படுத்தி எனது நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றித்தந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் இந்த விஜயத்தினை மேற்கொள்வதற்கு என்னை தெரிவு செய்தது மாத்திரமன்றி அதற்கு தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்ட இலங்கைக்கான முன்னாள் பலஸ்தீன் தூதுவரும் மலேசியாவுக்கான பலஸ்தீன் தூதுவராக தற்போது செயற்பட்டுக் கொண்டிருக்கும் கலாநிதி அன்வர் எச். அல் அகாவிற்கும் இவ்விடத்தில் என் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த விஜயத்தின்போது பலஸ்தீனத்தின் முக்கிய நகரங்களான, ஜெருஸலம், கிப்ரூன், பெத்லஹேம் மற்றும் ரமல்லா உள்ளிட்ட பல நகரங்களுக்கு விஜயம் செய்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது.

ஏற்கனவே தெரிவித்தது போன்று பலஸ்தீன் செல்வதென்பது மிகச் சிரமமான நிலையில் அங்கு சென்ற எனது அனுபவத்தினை ஏனையவர்களுடன் பகிர வேண்டியது தார்மிக கடமையாகும்.

இந்த அனுபவத்தினை கட்டுரையாக எழுதுமாறு எனது மனைவி பாத்திமா நிஹ்லா, விடிவெள்ளி பிரதம ஆசிரியரான நண்பர் எம்.பி.எம். பைறூஸ் உள்ளிட்ட பலர் ஊக்கம் வழங்கினர்.

இதன் அடிப்படையில் 'விடிவெள்ளி' வாரப் பத்திரிகையிலும், 'விடியல்' இணையத்தளத்திலும் 'களவாடப்பட்ட பூமியின் கதை' எனும் தலைப்பில் ஒன்பது தொடர் கட்டுரைகளை எழுதினேன்.

இந்த கட்டுரைக்கு அப்போது வாசகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்திருந்ததுடன் இதனை புத்தகமாக ஆவணப்படுத்துமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இந்த கோரிக்கையினை அடுத்தே எனது இரண்டாவது புத்தகமாக இதனை வெளியிடுகின்றேன். இந்த கட்டுரையினை எழுதும்போது பலஸ்தீன் தொடர்பில் எனக்கு தேவைப்பட்ட பல வரலாற்றுத் தகவல்களை The Trend எனும் ஆங்கில மாத இதழின் ஆசிரியரான சகோதரர் ஆஸிம் அலவியினால் எழுதப்பட்டு இஸ்லாமிக் புக் ஹவுஸினால் வெளியிடப் பட்ட பூகம்பம் எனும் தலைப்பிலான பலஸ்தீன விடுதலைப் போராளி யஹ்யா அய்யாஷின் வீர வரலாறு சம்பந்தப்பட்ட நூலிலிருந்து பெற்றுக் கொண்டேன். இதற்காக சகோதரர் ஆஸிம் அலவி அவர்களுக்கு இவ் விடத்தில் நன்றிகளை தெரிவிப்பதில் பெருமிதமடைகின்றேன்.

அத்துடன் இந்த நூலினை வெளியிடுவற்கு தேவையான உதவிகளை வழங்கிய இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சிய தூதுவரும், கொழும்பினை தளமாகக் கொண்டு செயற்படும் இராஜதந்திரிகளின் தலைவருமான ஹமீட் அப்துல் பதாஹ் கே. அல் முல்லாஹ் அவர்களிற்கும் இலங்கைக்கான பலஸ்தீன் தூதுவர் சுஹைர் எம்.எச். தார் செயித் அவர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்துடன் இந்த நூலுக்கான ஆசியுரை எழுதிய அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பிரதித் தலைவரும் பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீடத்தின் பிரதிப் பணிப்பாளருமான அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத் அவர்களுக்கும் நூலுக்கு முன்னுரை வழங்கிய தென்கிழக்கு பல்கலைக்கழக தமிழ் மொழித்துறை தலைவர் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் அவர்களுக்கும் நூலை அழகுற வடிவமைத்த நவமணி ஊடகவியலாளரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் செயற்குழு உறுப்பினருமான பிறவ்ஸ் முஹம்மட் அவர்களுக்கும் அல்ஹஸனாத் சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் செயற்குழு உறுப்பினருமான அஷ்ஷெய்க் ஜெம்ஸித் அஸீஸ் (நளீமி) அவர்களுக்கும் அச்சுப் பதிப்பை மேற்கொண்ட Perfect Printers உரிமையாளர் எம். நபீஸ் அவர்களுக்கும் எனது இதயங்கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஏ.ஏ.எம். றிப்தி அலி**
இணை ஸ்தாபகர் / பிரதம ஆசிரியர் – விடியல் இணையத்தளம்

01.11.2016

# உள்ளே வாருங்கள்!



பலஸ்தீன் ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் அவர்களை நூலாசிரியர் ஜனாதிபதி மாளிகையில் சந்தித்துக்கொண்டபோது....

பலஸ்தீன், உலகளாவிய முஸ்லிம் உம்மாவின் கனவு பூமி. இஸ்ரேலின் அராஜகத்தில் இந்தப் பூமி சிக்குண்டபோது உலகமே பலஸ்தீனுக்காக குரல் கொடுத்தது.

இந்த பூமியில் காலடி வைக்க வேண்டும் என்ற ஆசை யாரைத்தான் விட்டுவைக்காது. நானும் அப்படியானதொரு கனவில் மிதந்தவன் தான். அல்லாஹ்வின் அருளால் கடந்த 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பலஸ்தீன மண்ணில் கால்பதிக்கும் வாய்ப்பு கிட்டியது.

அந்த அலாதியான அனுபவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்வதற்காக இந்த சிறுநூலை எழுதுகிறேன். என்னுடன் இணைந்து பயணிக்கலாம் வாருங்கள்.

# 01

‘இறங்குங்கள்... அனைவரும் இறங்குங்கள்.... கடவுச்சீட்டினை கையில் எடுத்துக்கொண்டு இறங்குங்கள்...’ என படையினர் கட்டளையிடுவது போன்ற ஒரு சத்தம்.

அப்போது எனக்கு யுத்த காலத்தில் மன்னம்பிட்டி பிரதேசத்தில் படையினர் சகல பயணிகளையும் இறக்கி மணித்தியால கணக்கில் சோதனையிடும் காட்சிகள்தான் மனக்கண் முன் ஓடின.

இப்படி எனது மன்னம்பிட்டி ஞாபகங்களை மீட்டிக்கொண்டிருந்தபோது கையில் துப்பாக்கியுடன் இராணுவ உடையணிந்த ஒருவர் என் முதுகில் தட்டி அதட்டலான தொனியில் ‘எழுந்து முன்னே நடந்து செல்லுங்கள்’ என்றார்.

குறித்த இராணுவ வீரரிடம் நான் ஏனென்று கேட்டதற்கு, ‘இது இஸ்ரேல் எல்லை. இங்குள்ள சோதனை சாவடியில் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். கீழே இறங்குங்கள்’ என்றார்.

இப்போது நீங்கள் யோசிக்கலாம். பலஸ்தீன் செல்லும் ஒருவர் ஏன் இஸ்ரேல் எல்லையை கடக்க வேண்டும், ஏனைய நாடுகளுக்கு நாம் செல்வதுபோல் பலஸ்தீனிலும் நேரடியாக சென்று இறங்கலாம் தானே என்று.

விமானத்தில் செல்வதற்கு அங்கிருக்கும் விமான நிலையங்கள் இயங்குவதில்லையே. பலஸ்தீன விமான நிலையங்களை இஸ்ரேல் குண்டு வைத்து தகர்த்து விட்டது.

அத்துடன் பலஸ்தீனில் விமான நிலையங்களை இயக்குவதற்கும் இஸ்ரேலிலுள்ள யூத அரசாங்கம் அனுமதி வழங்குவதில்லை. தற்போது ஹமாஸ் அமைப்பு, விமான நிலையங்களை இயக்க இஸ்ரேல் அனுமதியளிக்க வேண்டும் என்பதை தமது பிரதான கோரிக்கைகளுள் ஒன்றாக வைத்திருப்பதும் இதனால்தான்.

‘இது என்ன மனித உரிமை மீறல்? பலஸ்தீனில் விமான நிலையம் அமைக்க ஏன் இஸ்ரேலின் அனுமதியை பெற வேண்டும்?’ என்றும் உங்கள் மனதில் கேள்விகள் எழலாம்.

அதற்கான பதில் அடுத்தடுத்து கிடைக்கும், இன்ஷா அல்லாஹ்!

பலஸ்தீனின் அனைத்து நுழைவுப் பகுதிகளிலும் இஸ்ரேலின் சோதனைச் சாவடிகள் உள்ளன.

இந்த சோதனைச் சாவடிகளை கடந்தே பலஸ்தீனுக்குள் நுழையவும் வெளிவரவும் முடியும். பலஸ்தீனியரோ அல்லது வெளிநாட்டவரோ பலஸ்தீனுக்குள் நுழைவதென்றாலும் அங்கிருந்து வெளியேறுவதென்றாலும் இஸ்ரேலிடமிருந்து அனுமதி பெற்றாக வேண்டும்.

இஸ்ரேல் விரும்பினால் மாத்திரமே அதற்கு அனுமதி வழங்கும். இப்படியான நிலையில் பலஸ்தீன் நுழைவதற்கு எனக்கு இறைவனின் உதவியால் இஸ்ரேலின் அனுமதி கிடைத்தது.

வெளிநாடுகளுக்கு செல்வதென்றால் எமது கடவுச்சீட்டில் குறித்த நாட்டின் விஸா பொறிக்கப்படும். எனினும் அதுபோன்ற செயற்பாட்டினை பலஸ்தீன அரசாங்கம் மேற்கொள்ள முடியாது. இன்றுவரை பலஸ்தீன் ஒரு நாடாக அங்கீகரிக்கப்படாமையே இதற்கு காரணம்.

இதனால் ஏ4 தாளில் ஆங்கிலம் மற்றும் ஹீப்ரு ஆகிய மொழிகளில் எழுதப்பட்ட பத்திரமே விஸாவாக வழங்கப்படும். (ஹீப்ரு எனும் மொழி இஸ்ரேலிய அரச கரும மொழியாகும்.)

இதனைக் கொண்டே இஸ்ரேல் ஊடாக பலஸ்தீனை அடைய முடியும். ஏற்கனவே நான் கூறியதுபோன்று பலஸ்தீனத்தில் விமான நிலையமில்லாமையினால் இஸ்ரேல் மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளிலிருந்து தரை வழி ஊடாகவே பலஸ்தீனுக்குள் நுழைய முடியும்.

எனினும் முஸ்லிம்கள் இஸ்ரேலின் ஊடாக பலஸ்தீன் நுழைய விரும்புவதில்லை. இதனால் எமக்கு ஜோர்தானின் அம்மான் ஊடாக பலஸ்தீன் செல்வதற்கு சந்தப்பம் கிடைத்தது.

கொழும்பிலிருந்து அபுதாபி ஊடாக சுமார் 10 மணித்தியால விமான பயணத்தினை அடுத்து ஜோர்தான் தலைநகரான அம்மானை சென்றடைந்தேன். இந்தப் பயணத்தில் சுமார் மூன்று மணி நேரம் ஐக்கிய அரபு இராச்சியத்திலுள்ள அபுதாபி விமான நிலையத்தில் தரித்து நிற்கவேண்டியேற்பட்டதுடன், அம்மான் விமான நிலையத்திலிருந்து வெளியேறுவதற்கு சுமார் மூன்று மணித்தியாலங்கள் தேவைப்பட்டது. காரணம் ஜோர்தானுக்குள் நுழைவதற்கான விஸா இல்லாமையேயாகும்.

எனினும், சுமார் 50 அமெரிக்க டொலர் செலுத்தி ஜோர்தான்

ஒன் எரைவல் (வந்தவுடன் பெறும்) விஸாவினை பெற்றுக்கொண்டு விமான நிலையத்திலிருந்து வெளியேறினேன்.

மீண்டும் எந்த ஓய்வுமின்றி ஒரு வேனில் ஏறி சுமார் ஒரு மணித்தியால பயணம் மேற்கொண்டு மற்றுமோர் இடத்திற்கு வந்தேன். குறித்த இடம் பாலைவனப் பிரதேசமாக இருந்தது. அதுதான் ஜோர்தானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான எல்லையாகும்.

நான் மேலே கூறியபடி அங்கு சோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் மீண்டும் மற்றுமொரு பஸ்ஸில் ஏறி பலஸ்தீன் நோக்கி இஸ்ரேல் ஊடாக சென்றேன். சுமார் 45 நிமிட பயணத்தின் பின்னர் மற்றுமோர் இடத்தை சென்றடைதேன்.

அதுதான் இஸ்ரேல் எல்லையின் சோதனைச் சாவடியாகும். இதனை அலன் பிரிட்ஜ் என்றே அழைப்பர். எனினும் இதனை கிங் ஹுசைன் பிரிட்ஜ் என ஜோர்தானியர்கள் அழைப்பர்.

இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலுள்ள இடத்திலேயே அனைவரும் கீழே இறங்குமாறு வேண்டப்பட்டனர். ஜோர்தானின் அம்மான் நகரிலிருந்து பலஸ்தீன் செல்பவர்கள் இந்த இடத்தின் ஊடாக மாத்திரமே பலஸ்தீன் நுழைய முடியும்.

இந்த சோதனைச் சாவடியில் எனது பொதிகள் அனைத்தையும் அதிநவீன இலத்திரனியல் இயந்திரத்தின் ஊடாக சோதனையிட்ட பின்னர் என்னை சோதித்தனர்.

சோதனை முடிந்துவிட்டதுதானே... இனி புனித பலஸ்தீன் மண்ணில் காலடி வைக்கலாம்... நமது நீண்டநாள் கனவு நனவாகப் போகிறது என்ற சந்தோசம் மனதில் சிறகடித்த போதுதான் அந்தக் குரல் இடிபோல வந்திறங்கியது.

'நீங்கள் இங்கிருந்து செல்ல முடியாது. இந்த ஆசனத்தில் அமருங்கள்' என்றார் அங்கு கடமையில் இருந்த ஒரு பெண்மணி. அதிர்ச்சியில் நான் நின்றிருந்தபோது 'அமீர் அலி முகம்மது றிப்தி அலி' என்ற பெயரை உரத்த குரலில் இராணுவ வீரர் ஒருவர் உச்சரித்தார்.

'ஆம்...! நான்தான்!' என்று சொன்னவுடன் என்னை தனியாக ஓர் அறைக்குள் அழைத்துச் சென்றார்.

# 02

கடவுச்சீட்டின் முன் பக்கத்தினை பார்த்தவாறு...

இராணுவ வீரர்: எங்கிருந்து வருகின்றீர்?

நான்: இலங்கையிலிருந்து

இராணுவ வீரர்: அங்கு என்ன செய்கின்றீர்?

நான்: ஊடகவியலாளர்

இராணுவ வீரர்: இஸ்ரேலில் எங்கு போகின்றீர்?

நான்: தெரியாது

இராணுவ வீரர்: இஸ்ரேலில் எங்கு தங்குகிறீர்?

நான்: தெரியாது

இராணுவ வீரர்: எதற்காக இஸ்ரேல் போகின்றீர்?

நான்: மாநாடொன்றில் கலந்து கொள்வதற்காக...

இராணுவ வீரர்: பெட்டியில் ஆயுதங்கள் அல்லது வெடிகுண்டுகள் உள்ளனவா?

நான்: இல்லை


அலன் பிரிட்ஜ் சோதனைச் சாவடியில் எனக்கும் இஸ்ரேலிய இராணுவ வீரரொருவருக்கும் இடையில் இடம்பெற்ற சம்பாஷணையின் ஒரு பகுதியே இது.

இந்த சோதனைச் சாவடியில் சோதனைகள் மேற்கொண்ட பின்னர் சந்தேகமான நபர்கள் இஸ்ரேலிய உயர் இராணுவ அதிகாரிகளினால் விசாரணைக்குட்படுத்தப்படுவர்.

இந்த விசாரணையை அடுத்தே குறித்த நபரை பலஸ்தீனுக்குள்

அனுமதிப்பதா இல்லையா என்பதை தீர்மானிப்பர். அதுபோன்ற ஒரு விசாரணையே என்னிடம் இடம்பெற்றது.

அப்போது குறித்த சோதனைச் சாவடியில் நானே இறுதியானவ ராக காணப்பட்டேன். பலஸ்தீனத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படு வேனா என்ற அச்சத்துடன் நான் அந்த விசாரணையை எதிர்கொண் டேன்.



அலன் பிரிட்ஜ் எல்லை

குறித்த விசாரணை சுமார் 20 நிமிடங்கள் நீடித்தது. இந்த விசார ணையின்போது ஒரு தடவைகூட பலஸ்தீன் என்ற சொல்லை இஸ் ரேலிய இராணுவ வீரர் உச்சரிக்கவில்லை.

'பலஸ்தீன் என்ற ஒரு நாடே இல்லை' என்ற நிலைப்பாடு அந்த இராணுவ வீரன் பேசும் தோரணையில் தென்பட்டது. விசாரணை யின்போது பலஸ்தீனம் என்ற சொல்லினை பயன்படுத்தினால் பலஸ் தீனை ஒரு நாடு என அங்கீகரித்தது போன்றாகிவிடுமல்லவா?

பலஸ்தீன் எனும் வெறும் வார்த்தை பிரயோகத்தையே தவிர்க்கும் சியோனிசவாதிகள் எவ்வாறு பலஸ்தீனை ஒரு தனி நாடாக அங்கீ கரிப்பார்கள்? குழப்பத்தோடு அப்போது என் உள்ளத்தின் பலநூறு கேள்விக்கணைகளோடும் நான் போராடிக் கொண்டிருந்தேன்.

இந்த விசாரணையின் பின்னர் அங்கிருந்து போகலாம் என்றனர். ஆனால், மீண்டும் மற்றுமொரு நபர் என்னிடமிருந்து இரண்டு புகைப்படங்களை வாங்கிக்கொண்டு கணனியில் ஏதோ செய்தார்.

பின்னர் எனது புகைப்படம் உள்ளடக்கப்பட்ட அட்டையொன்றினை வழங்கினார். குறித்த அட்டையில் 17.11.2013ஆம் திகதி வரை மாத்திரமே தங்க முடியும் என இஸ்ரேலிய அரசாங்கத்தினால் தெரிவிக்கப்பட்டு பலஸ்தீன் நுழைவதற்கான அனுமதி வழங்கப்பட்டது.

வரலாறுகளை படித்தபோது உள்ளம் கற்பனை செய்துவைத்திருந்த புனித பூமியை கண்களால் காணப் போகின்றேன் என்ற பெருமிதத்துடன் சோதனைச் சாவடியிலிருந்து வெளியே வந்தேன். கொழும்பிலுள்ள பலஸ்தீன் தூதுவராலயத்தில் அப்போதைய காலப்பகுதியில் பொதுசன உறவுகள் அதிகாரியாக கடமையாற்றிய முஹம்மட் பாறுக் மற்றும் இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சினால் சிபாரிசு செய்யப்பட்ட ஐந்து இளைஞர், யுவதிகளும் பலஸ்தீன் விஜயத்தில் என்னுடன் பங்குகொண்டனர்.





குறித்த சோதனைச் சாவடியிலிருந்து வெளியேறியவுடன் பலஸ்தீனத்தின் எல்லைகளில் ஒன்றான சாக்கடல் எனும் பெயர் பலகையினைக் கொண்ட உயர்ந்த மண் மலையினை எம்மால் அவதானிக்க முடிந்தது.

ஆனால், மண் மலைக்கு அப்பாலிருந்த சாக் கடலை காண முடியவில்லை. எமது நாட்டில் கல் மலைகள் காணப்படுவது போன்று பலஸ்தீனத்தில் மண் மலைகளே பார்க்குமிடமெல்லாம் தென்பட்டன.

அப்போது அலன் பிரிட்ஜ் நேரம் பி.ப. 11.30 மணியாகும் (இலங்கையில் நள்ளிரவு 3 மணியாகும்). எனினும் எங்கே செல்வதென்று தெரியாமல் சோதனைச் சாவடியின் வெளிப்பகுதியில் அமர்ந்து கொண்டிருந்தோம்.

அலன் பிரிட்ஜ் அமைந்துள்ள பிரதேசத்திலிருந்து பலஸ்தீனின் ரமல்லா நகருக்கு செல்வதற்கு சுமார் ஒரு மணி நேரம் தேவைப்படும். எனினும் அனுமதியளிக்கப்பட்டவர்கள் தவிர்ந்த வேறு எவரும் ரமல்லாவிலிருந்து இந்தப் பகுதிக்கு வர முடியாது.

அத்துடன் இங்கிருந்து ரமல்லாவிற்கு செல்வதற்கு எந்தவிதமான வாகன வசதிகளுமில்லை. இதனால் ரமல்லா நகரிற்கு நாங்கள் செல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட வாகனம் எதுவென்று தெரியாத நிலையில் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளானோம்.

இந்நிலையில் நண்பர் பாறுக்கின் தொலைபேசி அலறியது. மறுமுனையில் இலங்கைக்கான பலஸ்தீன் தூதுவராக அப்போது



கடமையாற்றிய கலாநிதி அன்வர் அல்அகா (தற்போது மலேசிவுக் கான பலஸ்தீன் தூதுவர்) தொடர்புகொண்டு எம் நிலவரத்தை அறிந் துகொண்டு 'பொறுமையாக இருங்கள். வாகன வசதியினை ஏற்படுத் துகிறேன்' என்றார்

சற்றுநேரத்தின் பின்னர் அங்கு வந்த ஒருவர் 'இலங்கையர்கள் யார்' என கேட்டார். நாங்கள் தான் என்றவுடன் வாகனத்தில் ஏறுங்கள் என்று அழைத்துச் சென்றார்.

மிகுந்த களைப்புடனும் பசியுடனும் வாகனத்தில் ஏறிய எம்மைச் சுமந்த வாகனம் வேகமாக முன்னோக்கிச் சென்றது. அது மத்திய கிழக்கு மலைப்பாங்கான தோற்றம் என்பதனால் இரவு நேரத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளின் மின் விளக்கொளியைக் கூட அழ காக அவதானிக்க முடிந்தது.

அப்போது சாரதி காஸா, ரமல்லா, டெல் அவிவ் ஆகிய நகரங்க ளின் ஒளிகளை காண்பித்தவாறு சென்றார். அப்போது எனக்கிருந்த பிரயாணக் களைப்பும் சந்தித்த அசௌகரியங்களும் அவற்றை முழுமையாக ரசிக்க இடமளிக்கவில்லை.

பலஸ்தீன மக்கள் ஒரு திறந்த வெளிச்சாலையில் வாழும் பரிதாப நிலையை எண்ணியவாறே ஹோட்டலைச் சென்றடைந்தேன்.

இவ்வாறு பல்வேறு சிரமங்களைக் கொடுத்தால் வெளிநாட்டவர் கள் பலஸ்தீனுக்கு விஜயம் மேற்கொள்வதை தவிர்த்துக் கொள்வார் கள் என்ற நோக்கிலேயே இஸ்ரேலியர்கள் சுற்றுலா பிரயாணிகளுக்கு பல இன்னல்களை ஏற்படுத்துகின்றனர் என ஹோட்டல் அதிகாரி யொருவர் தெரிவித்தது என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

# 03

'நாங்கள் அனைவருக்கும் உதவி செய்வோம். ஆனால் எங்களுக்கோ உதவி செய்ய யாருமில்லையே' என்று தனது உள்ளக் குமுறலை வெளிப்படுத்தினார் பலஸ்தீன் பிரஜையொருவர்.

எனது இந்த விஜயத்தின் முதல் நாள் பலஸ்தீன் பிரஜையொருவருடன் வாகனத்தில் பிரயாணம் செய்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன் நாளுக்கு நாள் இஸ்ரேலியர்களினால் எங்களுக்கான கொடுமைகள் அதிகரிக்கின்றன. ஆனால், எங்களுக்கு உதவிசெய்ய யாருமில்லையே. பொருளாதார ரீதியில் சக்திமிக்கவையாக இஸ்லாமிய நாடுகள் இருந்தும் பலனில்லை எனவும் அவர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

பண ரீதியாக உதவிகளை வழங்காவிட்டாலும் எதிர்ப்புக் கண்டனங்களையேனும் இஸ்லாமிய நாடுகள் வெளியிடுவதில்லை. இஸ்ரேலின் யூத அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குபவையாகவே அவற்றின் செயற்பாடுகள் உள்ளன என இஸ்ரேலின் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் பல்வேறு துன்பங்களை எதிர்நோக்கி வரும் பலஸ்தீனப் பிரஜையொருவர் தெரிவித்தார்.

பலஸ்தீன், காஸா பகுதியில் இஸ்ரேல் மேற்கொண்ட கொடூர தாக்குதலின்போது பலம் பொருந்திய முஸ்லிம் நாடுகள் என்று வர்ணிக்கப்படும் சஊதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் எகிப்து உள்ளிட்ட பல முஸ்லிம் நாடுகள் அமைதி காத்தன.

ஆனால், பல ஆபிரிக்க நாடுகள் காஸா தாக்குதலுக்கு எதிராக பலத்த குரல்கொடுத்ததுடன் ஆபிரிக்க கண்டத்திலுள்ள பல நாடுகளிலும் ஐரோப்பாவின் சில நாடுகளிலும் இஸ்ரேலுக்கு எதிராக பல போராட்டங்கள் இடம்பெற்றன.

எனினும் காஸா தாக்குதலை கண்டித்து பலம்பொருந்திய முஸ்லிம் நாடுகள் என்று வர்ணிக்கப்படும் சஊதி அரேபியா, ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் எகிப்து போன்ற நாடுகளில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றதாக நாம் கேள்விப்பட்டதே இல்லை.

இதேவேளை, ஒவ்வொரு நாட்டுக்கும் பல எல்லைகள் உள்ளன.

பலஸ்தீன் முன்னாள் ஜனாதிபதி யாசீர் அரபாத் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்தில் நடைபெற்ற நினைவு தின நிகழ்வுகள்








ஆனால், பலஸ்தீனுக்கோ எல்லைகள் என்று எதனையும் குறிப்பிட முடியாது. காரணம் பலஸ்தீனின் நான்கு பக்கங்களும் இஸ்ரேலினால் அபகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக பலஸ்தீனத்தின் எல்லா நகரங்களும் இஸ்ரேலின் சியோனிச இராணுவத்தினாலேயே சூழப்பட்டுள்ளன. இதன் காரணமாக பலஸ்தீனத்தின் தலைநகராக தற்போதுள்ள ரமல்லாவிலிருந்து (பலஸ்தீனத்தின் உண்மையான தலைநகரம் ஜெரூசலம். எனினும் அந்த நகர் தற்போது சியோனிச அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ளது) ஹீப்ரூன் எனும் மற்றுமொரு நகரிற்கு செல்வதென்றால் கூட இஸ்ரேல் எல்லையினை தாண்டியே செல்ல வேண்டும்.

அதேவேளை சியோனிச இராணுவத்தினர் அனுமதி வழங்காவிட்டால் பலஸ்தீனத்தின் ஒரு நகரிலிருந்து மற்ற நகருக்கு செல்ல முடியாது. பாருங்கள், ஒரு நகரிலிருந்து மற்றொரு நகருக்கு செல்வதற்குகூட சியோனிச அரசாங்கத்தின் அனுமதிக்காக பலஸ்தீன மக்கள் தவிக்கின்றனர்.

இது ஒரு பாரிய அடிப்படை உரிமை மீறல் அல்லவா? இவ்வாறான பல தகவல்களை குறித்த பலஸ்தீன சகோதரரிடம் சேகரித்தவாறே முக்கியமான இடமொன்றை சென்றடைந்தேன்.

அதுதான் பலஸ்தீன் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தினை அண்மித்த பகுதியாகும். குறித்த பகுதியிலேயே பலஸ்தீனின் முன்னாள் ஜனாதிபதியான காலஞ்சென்ற யாசீர் அரபாத்தின் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

2013 நவம்பர் 11ஆம் திகதி யாசீர் அரபாத்தின் 9ஆவது நினைவு தினமாகும். இதனை முன்னிட்டு பல நிகழ்வுகள் பலஸ்தீனத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

1929 ஒகஸ்ட் 24ஆம் திகதி எகிப்தின் கெய்ரோ நகரில் பலஸ்தீன பெற்றோருக்கு ஆறாவது குழந்தையாக யாசீர் அரபாத் பிறந்தார்.


அரபாத்தின் நான்காவது வயதில் தாயார் மரணித்து விட்டார். பின்னர் தந்தையின் கட்டுப்பாட்டில் வளர்ந்த அரபாத், எகிப்திலுள்ள பல்கலைக்கழகமொன்றில் சிவில் பொறியியல் துறையில் பட்டம் பெற்றார்.

அங்கிருந்து பொறியியலாளராக பலஸ்தீன் திரும்பிய அவர்

1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் பலஸ்தீனத்தில் இடம்பெற்ற யூதர்களுக்கு எதிரான போராட்டத்தில் இணைந்து கொண்டார்.

இந்த நிலையில் 1967ஆம் ஆண்டு பலஸ்தீன் விடுதலை இயக்கம் அரபாத் தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து பதாஹ் எனும் அரசியல் கட்சியொன்று குறித்த இயக்கத்தின் பிரிவாக ஆரம்பிக்கப்பட்டது.

அன்றைய காலப்பகுதியில் உலகில் தலைசிறந்த நவீன நுட்பங்களையும் ராஜதந்திரங்களையும் கொண்ட போராட்ட இயக்கமாக பலஸ்தீன விடுதலை இயக்கம் வர்ணிக்கப்பட்டது.



இவ்வாறு இரு நாடுகளுக்கும் இடையிலான போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயம், 1994ஆம் ஆண்டு பலஸ்தீன் தேசிய அதிகார சபை உருவாக்கப்பட்டது.

இதனையடுத்து 1996ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று பலஸ்தீன் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட

யாசீர் அரபாத், சுஹா தெவில் எனும் பலஸ்தீன கிறிஸ்தவ பெண்மணியை 1990ஆம் ஆண்டு திருமணம் செய்திருந்தார்.

2004 நவம்பர் 11ஆம் திகதி தனது 75ஆவது வயதில் இஸ்ரேலியர்களினால் படுகொலை செய்யப்படும் வரை பலஸ்தீன் ஜனாதிபதியாக அவர் பணிபுரிந்தார்.

யாசீர் அரபாத்தின் மறைவினையடுத்து அவரது ஜனாஸா, பலஸ்தீன் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தினை அண்மித்த பகுதியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

யாசீர் அரபாத்தின் மரணத்தில் பல்வேறு சந்தேகங்கள் காணப்பட்டபோதிலும் ஒவ்வொரு வருடமும் அவரது நினைவு தினம் பலஸ்தீனத்தில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பொதுமக்கள் நடமாட்டமற்ற அதிகாலை பொழுதில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் யாசீர் அரபாத்தின் ஜனாஸா தோண்டப்பட்டது என பலஸ்தீன் பிரஜையொருவர் தெரிவித்தார்.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது யாசீர் அரபாத் இஸ்ரேலியர்களினால் நஞ்சூட்டிக் கொலை செய்யப்பட்டமை உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில் குறித்த இடத்தில் அவரின் ஜனாஸா மீண்டும் நல்லடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த இடத்தில் ஒவ்வொரு வருடமும் இடம்பெறும் அவரது நினைவு தின வைபவத்தில் அவருக்காக பிரார்த்தனை செய்யப்படுகிறது.

எனது பலஸ்தீன் விஜயத்தில் இந்த நிகழ்விற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இதற்கமைய மறைந்த ஜனாதிபதி யாசீர் அரபாத்தின் நினைவுதின வைபவத்தில் நானும் கலந்துகொண்டேன்.

அந்த இடத்திற்கு நாங்கள் விஜயம் மேற்கொண்டபோது, 'பலஸ்தீனத்திற்கு விஜயம் மேற்கொள்ளும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் அனைவரும் யாசீர் அரபாத் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்தினை பார்வையிடுவது வழமையாகும்' என்றார் அந்நாட்டு பிரஜையொருவர்.

# 04

உலகில் 124,000க்கும் மேற்பட்ட நபிமார்கள் பூமிக்கு அனுப்பப் பட்டிருக்கிறார்கள். இதில் அதிகமான நபிமார்கள் வாழ்ந்த இடம் பலஸ்தீனாகும்.

நபிமார்களான இப்றாஹீம் (அலை), இஸ்மாயீல் (அலை), தாவூத் (அலை), மூஸா (அலை) மற்றும் சுலைமான் (அலை) ஆகியோரின் ஜனாஸாக்களும் இந்த மண்ணிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டுள் ளன.

எனது இந்த விஜயத்தின்போது இவர்களின் ஜனாஸாக்கள் நல்ல டக்கம்செய்யப்பட்டஇடங்களைபார்வையிடசந்தர்ப்பம்கிடைத்தது. இதற்கு மேலதிகமாக இஸ்லாத்தின் முதலாவது கிப்லாவும் மூன் றாவது புனித ஸ்தலமுமான அல்அக்ஸாவும் இங்கேதான் உள்ளது.

அத்துடன் நபிமார்களான மூஸா (அலை) மற்றும் ஈஸா (அலை) ஆகியோரின் பிரசாரத் தளமாக பலஸ்தீன் விளங்கியுள்ளது. இதனால் யூத மற்றும் கிறிஸ்தவர்களும் இந்த மண்ணை புனிதமானதாகவே கருதுகின்றனர்.

எனினும் இந்த பலஸ்தீன் மண்ணில் சுமார் இரண்டு சதவீதமான கிறிஸ்தவர்கள் வாழ்கின்றனர். பல இயற்கை வளங்களைக் கொண்ட பசுமைச் செழிப்புமிக்க இந்த பலஸ்தீன் எவ்வாறு இஸ்ரேலின் கரங் களுக்குள் சிக்கியது என்பது பலருக்கு புரியாமல் இருக்கலாம்.

எனது பலஸ்தீன் விஜயத்தில் இக்கேள்விக்கான சரியான பதிலை தேடுவதில் நான் மும்முரமாக ஈடுபட்டேன். இதற்காக நான் பல்வேறு பலஸ்தீனியர்களை சந்திக்க நேரிட்டது.

பல்வேறு வகையான வளங்களை தன்னகத்தே கொண்டிருக்கும் பலஸ்தீன் பலமுறை முஸ்லிம்களின் கையிலிருந்து பறிபோய் மீண் டும் கைப்பற்றப்பட்டிருக்கிறது. இறுதியாக உஸ்மானிய கிலாபத்திற்கு கீழிருந்த பலஸ்தீனை பிரித்தானிய காலனித்துவவாதிகள் கைப்பற் றினர்.

பிற்பட்ட காலத்தில் பலஸ்தீன மண்ணை யூதர்கள் ஆக்கிரமிக்க வழியமைத்துக் கொடுத்தவர்கள் பிரித்தானியர்கள். இதன் காரணமா கவே பலஸ்தீன் மண்ணில், இஸ்ரேல் எனும் நாடு உருவானது.

இந்த வரலாற்றின் உண்மை நிலையறிந்தவர்கள் ஒருபோதும் மறுப்புக் கூறமாட்டார்கள். மனிதர்களில் அதிக பய உணர்வு கொண்டவர்களும் நீண்ட நாட்கள் உலகில் வாழும் பேராசை கொண்டவர்களும் யூதர்களே என அல்லாஹ் புனித அல்குர்ஆனில் குறிப்பிடுகின்றான்.

அபாரமான தந்திரசாலிகள் மற்றும் பாரிய சூழ்ச்சிக்காரர்கள் என்ற பெருமையினை கொண்ட யூதர்களில் சுமார் ஆறு மில்லியன் பேரை இரண்டாவது உலக மகா யுத்தம் இடம்பெற்றபோது ஜேர்மனியை ஆட்சி செய்த ஹிட்லர் கொலைசெய்தார்.

இதுபற்றி ஹிட்லரின் கூற்றொன்றில், 'உலகின் தொண்ணூறு சதவீதமான யூதர்களை நான் அழித்துவிட்டேன். எஞ்சியுள்ள பத்து சதவீதமானவர்களை விட்டுச் செல்கிறேன். ஏனெனில் நான் ஏன் அவர்களை அழித்தேன் என்பதை இவ்வுலகம் ஒருநாள் உணர்ந்து கொள்ள வேண்டுமென்பதற்காக' என கூறியுள்ளார். அந்த தொண்ணூறு சதவீதமானவர்களையும் ஹிட்லர் கொலை செய்யாவிட்டால் இன்று உலகம் எங்கே சென்றிருக்குமோ?

இதன் பிற்பாடு எஞ்சிய யூதர்கள் தமக்கென ஒரு நாடின்றி அலைந்து திரிந்தனர். இந்நிலையில் யூதர்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாநாடொன்று 1800ஆம் ஆண்டுகளின் இறுதிப் பகுதியில் ஒஸ்ரியாவின் வியன்னா நகரில் இடம்பெற்றது.


ஹர்ஸல் எனும் யூத சிந்தனையாளரின் தலைமையில் இடம்பெற்ற இந்த மாநாட்டில், இன்று முஸ்லிம்களுக்கு எதிராக உலகளாவிய ரீதியில் செயற்படும் ஸியோனிஸ இயக்கம் உருவாக்கப்பட்டது.

தனது வல்லமையை பயன்படுத்தி யூதர்களை ஹர்ஸல் தைரியப்படுத்தி அவர்களுக்கு புத்துணர்ச்சியையும் நம்பிக்கையையும் ஊட்டியமையினால் யூதர்கள் தனிநாட்டு கோரிக்கையினை பிரகடனப்படுத்தினர்.


அச்சமயத்தில் யூதர்களிடம் இராணுவ பலமோ அல்லது அரசியல் பலமோ இருக்கவில்லை. மூளை பலமும் தந்திர புத்தியுமே அவர்களிடமிருந்தது. அதனைக் கொண்டு 1950ஆம் ஆண்டுக்குள் யூதர்களுக்கு தனி நாடொன்றை உருவாக்கும் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

முதலில் அவர்கள் ஆர்ஜெண்டீனாவை தெரிவுசெய்தனர். எனினும் அதனை பெரும்பாலான யூதர்கள் விரும்பவில்லை. பின்னர், பலஸ்தீனத்தை அவர்கள் தெரிவுசெய்தனர். அரேபிகளுக்கும் முஸ்லிம்க

ளுக்கும் சொந்தமான இந்த பலஸ்தீன் மண்ணே எமக்கு பொருத்த மான இடமென அவர்களின் தந்திர மூளையின் ஊடாக நிரூபித்து அதில் வெற்றியும் கண்டனர்.



இப்றாஹீம் நபி அவர்கள் உள்ளிட்ட குடும்பத்தார் நல்லடக்கம் செய்யப் பட்டுள்ள ஹெப்ரூன் நகரிலுள்ள மஸ்ஜிதுன் இப்றாஹீம் பள்ளி வளாகம்





அதாவது, யூதர்கள் கருணையற்ற முறையில் வட்டி அறவிட்டு பிழைப்பு நடத்துபவர்கள் என்ற விடயம் உலகமே அறிந்த ஒன்றாகும். இஸ்லாத்தில் தடை செய்யப்பட்ட இந்த வட்டித் தொழிலின் மூலமே பலஸ்தீன மண்ணை இஸ்ரேல் அபகரிப்புச் செய்தது.

பலஸ்தீனத்தில் வாழ்ந்த ஒரு முஸ்லிம் தனது குடும்பத்தின் கஷ்டத்தினை போக்குவதற்காக தனது சொந்த காணியினை அப்பிரதேசத்தில் வாழ்ந்த யூதனொருத்தனிடம் அடகுவைத்து பணத்தினை பெற்றுக்கொண்டார்.

குறித்த பணத்தை வட்டியுடன் திருப்பிச் செலுத்த முடியாமையின் காரணமாக முஸ்லிமின் நிலம் ஒரு யூதனின் கைக்கு மாறியது. யூதர்களினால் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இந்த திட்டத்தின் மூலம் பெறப்பட்ட குறித்த காணி, பல துண்டுகளாக பிரிக்கப்பட்டு யூதர்களுக்கு விற்கப்பட்டு யூத குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டது.

இதனைப் போன்ற செயற்திட்டங்கள் பலஸ்தீனின் பல பாகங்களிலும் வித்தியாசமான முறையில் 1947ஆம் மற்றும் 1948ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்றன. அதாவது எமது நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்தபோது பலஸ்தீன மண்ணின் சுதந்திரம் பறிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1947ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு இலட்சத்திற்கும் குறைவாக யூதர்களின் சனத்தொகை காணப்பட்டது. இதன்போது அமெரிக்க, பிரிட்டன் போன்ற வல்லரசு நாடுகளின் ஒத்துழைப்புடனும் ஐக்கிய நாடுகளின் அனுசரணையுடன் 1947ஆம் ஆண்டு பலஸ்தீன், யூதர்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டது.

இதனையடுத்தே முஸ்லிம்களினதும் அரபிகளினதும் சொந்த மண்ணில் இஸ்ரேல் எனும் நாடு உருவாகியது. அத்தோடு அந்த அப்பாவி மக்களின் கஷ்ட காலமும் ஆரம்பமாகியது. எனினும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து 1967ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரபு நாடுகள் இஸ்ரேலுடன் பாரிய யுத்தத்தில் ஈடுபட்டன.

எனினும் அமெரிக்க மற்றும் பிரித்தானியா போன்ற வல்லரசு நாடுகளின் இராணுவங்கள் இஸ்ரேலுக்கு உதவி வழங்கின. இதனால் அரபு நாடுகள் பாரிய தோல்வியினை சந்தித்தன.

இந்நிலையில் 1973ஆம் ஆண்டின் இறுதியில் யூதர்களின் சனத் தொகை சுமார் ஐந்து இலட்சமாகியது. இந்த ஆண்டின் இறுதியில் ஐக்கிய நாடுகளில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் மற்றும் அரபு நாடுகளுடனான மோதலின் வெற்றி ஆகியவற்றை அடிப்படையாக வைத்து பலஸ்தீனத்தின் 80 சதவீத பகுதியை இஸ்ரேல் அபகரித்துக் கொண்டு உரிமை கொண்டாடியது.

இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் அவசர அவசரமாக வெளிநாடுகளிலிருந்த யூதர்கள் கொண்டுவரப்பட்டு குடியமர்த்தப் பட்டனர். இதன்போது குடியேற்றப்பட்டவர்களுக்கு இஸ்ரேல் அர சாங்கத்தினால் பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டன.

இந்த செயற்திட்டங்களுக்கு அன்று ஆதரவாக செயற்பட்ட அமெ ரிக்க மற்றும் பிரிட்டன் ஆகிய அரசாங்கங்கள் இன்று வரை இஸ்ரே லுக்கு ஆதரவாக செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று 1947ஆம் ஆண்டு ஆரம்பித்த பலஸ்தீனர்களின் காணியை அபகரிக்கும் செயற்பாட்டினை இன்றுவரை இஸ்ரேலி யர்கள் மேற்கொள்கின்றனர். இதனைத் தட்டிக் கேட்கும் துணிவைக் கொண்ட ஓர் அரசையேனும் இன்னும் இந்த உலகம் ஈன்றெடுக்க வில்லை.

1947ஆம் ஆண்டு காலப்பகுதியில் இஸ்ரேலின் காணி அபகரிப் பிற்கு எதிராக போராடிய பலஸ்தீனர்கள், விரட்டியக்கப்பட்டதுடன் ஈவிரக்கமின்றி கொன்றொழிக்கப்பட்டனர். இதனால் அகதிகளாக்கப் பட்ட பல்லாயிரக்கணக்கானோர் நாட்டை விட்டு வெளியேறினர்.

ஆனால் இன்று, 'நாங்கள் நாட்டை விட்டு வெளியேறமாட்டோம். இஸ்ரேலுடன் போராடி எமது மண்ணில் மடியவும் தயாராகவுள் ளோம்' என்றார் நான் சந்தித்த பலஸ்தீன் இளைஞரொருவர்.

இதனை ஒத்தது போன்றே காஸாவில் இடம்பெற்ற இஸ்ரேலின் கொடூர தாக்குதலின்போது யாருமே நாட்டை விட்டு வெளியேற வில்லை. மாறாக ஷுஹதாக்களின் குருதி காஸா மண்ணை நனைத் தது. அது இன்னும் ஆயிரமாயிரம் ஷுஹதாக்களை அகதிகள் வடி விலும் அநாதைகள் உருவிலும் விட்டுச் சென்றுள்ளது. இல்லை.. விதைத்துச் சென்றுள்ளது.

# 05

ஹஜ் பெருநாள் இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் தியாகத்தினை நினைவுகூரும் வகையிலேயே கொண்டாடப்படுகின் றது. இதனால் அவர் தொடர்பாக பல விடயங்கள் ஞாபகப்படுத்தப் படுகின்றன.

இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களிற்கும் பலஸ்தீனத்திற் கும் இடையில் மிக நெருங்கிய தொடர்புள்ளது.

அதாவது இப்றாஹீம் (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் ஜனாஸா பலஸ்தீன மண்ணிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. பலஸ்தீ னின் உண்மையான தலைநகரான ஜெரூஸலத்திலிருந்து சுமார் 30 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள ஹெப்ரோன் எனும் நகரிலேயே அவரது ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இந்த நகரின் அரபுப் பெயர் கலீல் அல் ரஹ்மான் ஆகும். அதாவது நபி இப்றாஹீம், அல்லாஹ்வின் நண்பர் ஆவார் என்பது இதன் கருத் தாகும்.

சுமார் 5,000 வருடங்கள் பழமை வாய்ந்த இந்த நகர் உலகிலுள்ள புராதன நகரங்களில் ஒன்றாகும். இங்கு சுமார் 600,000 முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

இந்த நகரிற்குள் நுழையும்போது புராதனத்தின் மண்வாசம் வீசு கின்றது. யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் மத ரீதியான புனித நகராக இது உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நகரில் சுமார் 400 யூதக் குடும்பங்கள் சட்டவிரோதமாக குடி யேற்றப்பட்டுள்ளனர். இவர்களின் பாதுகாப்புக்காக சுமார் 1,500 யூத இராணுவத்தினர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக இந்நகரில் வாழும் யூதர்களுக்கு இஸ்ரேலிய அரசாங்கத்தினால் துப்பாக்கிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு பலத்த அச்சத்துடன் யூதர்கள் வாழும் இந்த நகரத்திலுள்ள பள்ளிவா சலொன்றிலேயே இப்றாஹீம் நபி (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதனால் அப்பள்ளிவாசல் அல்-இப்றாஹீம் என்று அழைக்கப் படுகின்றது. இங்கு இப்றாஹீம் நபி (அலைஹிஸ்ஸலாம்) அவர்க ளின் மனைவி சாரா, அவர்களிருவருக்கும் பிறந்த பிள்ளைகளான இஸ்ஹாக், யஃகூப் மற்றும் அவர்களிருவரதும் மனைவிமார் ஆகி யோர்களது ஜனாஸாக்களும் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன.

இந்த பள்ளிவாசலுக்கு விஜயம் மேற்கொண்டு இவர்கள் நல்ல டக்கம் செய்யப்பட்டுள்ள இடத்தை பார்வையிட எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது.

ஆனால் இந்த பள்ளிவாசல் இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட் டுள்ளது. அதில் ஒரு பிரிவு முஸ்லிம்களின் வணக்க வழிபாட்டுக்கும் மற்றையது யூதர்களின் வணக்க வழிபாட்டுக்குமாக ஒதுக்கப்பட் டுள்ளது.

இது என்ன அநியாயம்...? பள்ளிவாசல் இரண்டாக பிரிக்கப்பட்டு அதில் ஒரு பகுதி யூதர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என நீங்கள் நினைக்கலாம். அவ்வாறுதான் நானும் கேள்வியெழுப்பிய வேளை பலஸ்தீன சகோதரரொருவர் இவ்வாறு எனக்கு பதிலளித்தார்.



மஸ்ஜிதுன் இப்றாஹீம் பள்ளிவாசலில் யூதர்கள் வழிபடுவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதிக்கான நுழைவாயில்

அதாவது 1991ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் முஸ்லிம்கள் நோன்பு நோற்றனர். அந்த புனித ரமழான் மாதத்தின் பதினைந்தா வது நாள் மஸ்ஜிதுல் - இப்ராஹீம் பள்ளிவாசலில் சுபஹ் தொழுகை யின்போது பாரிய இனச் சுத்திகரிப்பொன்று இடம்பெற்றது.

அமெரிக்காவிலிருந்து வந்து குடியேறிய பழைமைவாத யூதனான பருச் கோல்ஸ்டைன் என்பவனினாலேயே இந்த சதித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ரமழான் மாதம் என்பதனால் சஹர் செய்துவிட்டு சிறியவர்கள் மற்றும் பெரியவர்கள் என பலர் பள்ளிவாசலில் சுபஹ் தொழுகையில் ஈடுபட்டனர். இந்த சமயத்தில் பள்ளிவாசலுக்குள் துப்பாக்கியுடன் பருச் கோல்ஸ்டைன் தனது நண்பனுடன் நுழைந்து தொழுகையில் சுஜூது நிலையிலிருந்த முஸ்லிம்களை துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினான்.

காத்தான்குடி மீரா ஜும்ஆ பள்ளிவாசலில் 1990ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளினால் முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டதை போன்றதே இச்சம்பவமாகும்.

இதன்போது பள்ளிவாசலுக்கு வெளியில் யூதர்களுக்காக பாதுகாப்பு கடமையிருந்த இராணுவத்தினரும் பள்ளியினுள் நுழைந்து தொழுகையில் ஈடுபட்டவர்கள் மீது சுட்டனர்.

இதனால் அல்லாஹ்வின் வீடு இரத்த வெள்ளமாக மாறியது. இந்த தாக்குதலிலிருந்து முஸ்லிம்கள் தப்ப முயற்சித்தபோதும் வாயிலில் நின்ற யூத படையினரால் தடுக்கப்பட்டனர். இந்த வெறியாட்டத்தில் 40 முஸ்லிம்கள் ஷஹீதாக்கப்பட்டதுடன் 310 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த செயற்பாட்டில் ஈடுபட்ட பரூச், ஆத்திரமடைந்த தொழுகையாளர்களினால் கொல்லப்பட்டான். இந்த தாக்குதலின்போது சர்வதேச சட்டத்தில் தடைசெய்யப்பட்டுள்ள ஆயுதங்களே பயன்படுத்தப்பட்டுள்ளது என பின்னர் செய்திகள் வெளியாகின.

எனினும் அந்த பரூச் மனநோயாளி என இஸ்ரேலிய அரசாங்கம் அறிவித்தது. இது மரபணு பரிசோதனையின் ஊடாக பொய் என பின்னர் நிரூபிக்கப்பட்டது.

இந்த இனச் சுத்திகரிப்பின் பின்னர் இந்த பள்ளிவாசல் சில மாதங்களுக்கு இஸ்ரேலிய இராணுவத்தினால் மூடப்பட்டது. ஆனால், பள்ளிவாசல் திறக்கப்பட்டபோது இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது.

இதில் ஒருபகுதி முஸ்லிம்களின் மத வழிபாட்டுக்கும் மற்றைய

பகுதி யூதர்களின் வணக்க வழிபாட்டுக்குமாக பிரிக்கப்பட்டது. இந் நிலை இன்றுவரை தொடர்கின்றது.

அத்துடன் பள்ளிவாசலை சுற்றி கனரக கம்பி வேலிகளும் உயர மான சுவர்களும் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் யூத இராணுவத்தி னர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்த பள்ளிவாசலில் நுழைகின்ற அனைவரும் யூத இராணுவத் தின் காவலரணை தாண்டியே செல்ல வேண்டும். இந்த பள்ளிவாச லில் முஸ்லிம்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதிக்குள் அனைவரும் செல்ல முடியும்.

ஆனால், யூதரின் பகுதிக்குள் அவர்களை தவிர்ந்த வேறு யாரும் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. இந்த பள்ளிவாசலில் யூதர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதிக்குள் மிக மோசமான சம்பவங்கள் இடம்பெறுகின்றதாக பலஸ்தீனரொருவர் தெரிவித்தார்.

அதாவது பள்ளிவாசலினுள் நாய்களை அழைத்துச் செல்லல், சப்பாத்துடன் செல்லுதல் மற்றும் பாலியல் சேட்டைகள் போன்ற பல்வேறு வெறுக்கத்தக்க செயல்கள் இடம்பெறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இந்த பள்ளிவாசலின் முழுப் பகுதியும் வருடத் தில் 10 நாட்களுக்கு முஸ்லிம்களுக்கு வழங்கப்படும். அதேபோன்று 10 நாட்கள் யூதர்களுக்கு முழுமையாக பள்ளிவாசல் வழங்கப்படும்.

வெள்ளி மற்றும் ஞாயிறு போன்ற தினங்கள், பெருநாள் ஆகிய தினங்களிலேயே பள்ளிவாசல் முழுவதும் குறித்த ஒரு சமூகத்தின ருக்கென வழங்கப்படும்.

இனச் சுத்திகரிப்பின்போது சேதமாக்கப்பட்ட பள்ளிவாசலின் புனர்நிர்மாணத்திற்கு சஊதி அரேபிய அரசு நிதியுதவி அளித்தது. எனினும் பள்ளிவாசலை சுற்றி இஸ்ரேலிய குடியேற்றங்கள் உள்ள மையினால் புனர்நிர்மாணத்தின்போது பல சவால்கள் எதிர்நோக்கப் பட்டன.

எனினும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இப்றாஹீம் நபி (அலைஹிஸ்ஸலாம்) அவர்களின் மண்ணறை மற்றும் பள்ளிவாச லின் சில முக்கிய பகுதிகள் புனர்நிமாணம் செய்யப்பட்டன.

# 06

'நீ ஒரு பயங்கரவாதி. உன்னை என்ன செய்கிறோம் என்றுபார். உன்னை வளரவிட்டால் எதிர்காலத்தில் எங்கள் சமூகத்திற்குத்தான் அழிவு' என ஹீப்ரூ மொழியில் உரத்த தொனியில் தெரிவித்தவாறு சுமார் 10 வயது மதிக்கத்தக்க பலஸ்தீன சிறுவனொருவனை இரண்டு யூத பொலிஸார் அழைத்துச் செல்வதை அவதானித்தேன். மஸ்ஜிதுன் இப்றாஹீம் பள்ளிவாசலிலிருந்து வெளியாகும்போதே இந்த சம்பவத்தைக் கண்டேன்.

யூத இராணுவத்தினர் சிறுவனை அழைத்துச் சென்றபோது அவன் எந்தவித அச்ச உணர்வுமின்றி எதனையும் சந்திக்கக்கூடிய மனோபக்குவத்தை கொண்டவனாக காணப்பட்டான்.

இந்த சிறுவனை விடுதலை செய்யுமாறு யூத பொலிஸாரிடம் சில பலஸ்தீனியர்கள் கோரிக்கை விடுத்தனர். எனினும் அவர்களின் கோரிக்கையினை நிராகரித்து பொலிஸ் நிலையத்தினுள் சிறுவன் அழைத்துச் செல்லப்பட்டான். இந்த விடயம் தொடர்பில் குறித்த பிரதேசத்தில் மட்பாண்ட நிலையம் வைத்திருந்த ஒருவரிடம் வினவினேன்.

'அதை விடுங்கள் தம்பி. உங்களுக்கு இது புதிய விடயம். ஆனால் எங்களுக்கு இது வழமை. இந்த சிறுவனுக்கு வயது 10. ஒரு பிஞ்சு



பாலகன். இஸ்ரேலியர்கள் மீது கல் வீசினான் என்ற குற்றாச்சாட்டிலேயே இப்படி அழைத்துச் செல்லப்படுகின்றான். எனினும் அந்த பச்சிளம் பாலகன் யார்மீதும் கல் வீசவில்லை. இவர்களைப் போன்ற சிறுவர்களை தற்போது அடக்கினால்தான் நல்லது என்ற அடிப்படையில் யூத படையினர் தொடர்ச்சியாக இவன் போன்ற சிறுவர்களை கைது செய்கின்றனர்' என்றார்.

அடுத்த கட்டமாக இந்த சிறுவனை என்ன செய்வார்கள் எனக் கேட்டேன். 'இந்த சிறுவனைக் கொண்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவர். இதன்போது சிறுவனுக்கு எதிராக பல போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பர்.

இதனை நம்பி யூத நீதவானும் சுமார் மூன்று மாதங்கள் இந்த சிறுவனை சிறையில் அடைப்பார். சிறையிலிருக்கும்போது பலவிதமான சித்திரவதைகளுக்கு உள்ளாவான்.

அதேபோன்று இவனது கல்வியும் பாழாக்கப்படும். இப்படித்தான் இங்குள்ள சிறுவர்களின் வாழ்க்கை கழிகின்றது. இதை யாரிடம்போய் முறையிடுவது. எல்லாம் அறிந்த இறைவனே எங்களை பாதுகாக்க வேண்டும்' என்றார் அவர் கவலை தோய்ந்த முகத்துடன்.

இவருடன் உரையாடியவாறு கடல் மட்டத்திலிருந்து 1,000 மீற்றர் உயரத்திலுள்ள பலஸ்தீனின் உச்சியிலுள்ள ஹெப்ரூன் நகரை சுற்றிப் பார்த்தேன்.

ஏற்கனவே நான் கூறியது போன்று புராதன நகரான ஹெப்ரூன் கறுப்பு தேனுக்கு பிரபல்யமானது. இந்த நகரின் சில பகுதிகளை இஸ்ரேலியர்கள் 1967ஆம் ஆண்டுக்கு பின்னரே கைப்பற்றினர். இதன் காரணமாக பழைய ஹெப்ரூன் நகரிலிருந்த முஸ்லிம்கள் வெளியேறினர்.

இதனையடுத்து யூதர்களினால் புதிய ஹெப்ரூன் நகர் உருவாக்கப்பட்டது. இதற்கு முன்னர் ஜோர்தானின் கட்டுப்பாட்டிலும் இந்த நகர் சில வருடங்கள் இருந்துள்ளது. யூத படையினரால் சேதமாக்கப்பட்ட இந்த நகரை புனரமைப்பதற்காக ஹெப்ரூன் புனர்வாழ்வு நிலையமொன்றும் அங்கு செயற்படுகின்றது.

ஹெப்ரூன் புனர்வாழ்வு நிலையம் 1996ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அரபு பலஸ்தீனின் வரலாற்று நகராக ஹெப்ரூனை பாதுகாத்தல், இந்த நகரிலுள்ள கலாசாரம் மற்றும் பாரம்பரிய கட்டிட கலையினை பாதுகாத்தல் மற்றும் பழைய நகரினை யூத குடியேற்ற வாசிகளிடமிருந்து பாதுகாத்தல் உள்ளிட்ட பல பிரதான நோக்கங்

களை அடிப்படையாக வைத்து இந்த அமைப்பு செயற்திட்டங்களை அந்த பிரதேசத்திலுள்ள பலஸ்தீனர்களுக்கு மேற்கொண்டு வருகின்றது.

இதன் காரணமாக தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பல விருதுக ளையும் இந்த நிலையம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. யூத இரா ணுவத்தினால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கும் மக்களுக்கு ஆலோசனை வழங்குதல், இஸ்ரேலியர்கள் சர்வதேச சட்டங்களை மீறுவதை கண்காணித்து ஆவணப்படுத்துதல், பலஸ்தீனர்களின் உரிமை தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்ற செயற் திட்டங்களையும் இந்த அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

இந்த அமைப்புக்கு பலஸ்தீன் தேசிய அதிகார சபை, சஊதி அபிவி ருத்தி நிதியம், அரபு பொருளாதார சமூக அபிவிருத்தி நிதியம், அரபு நிதி நிதியம், இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, யூ.என்.டி.பி. மற்றும் அவுஸ்திரேலியா, கனடா, பிரித்தானியா, நோர்வே போன்ற நாடுகளும் உதவி வருகின்றன.

இதற்கு மேலதிகமாக ஹெப்ரூனிலுள்ள இளைஞர்களுக்கு இந்த நிலையத்தில் தொழில்நுட்பசார் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. 17 -25 வயது பிரிவினருக்கு இலவச தச்சுத் தொழில், ஆவணப்படுத்தல், அழகுபடுத்தல், கட்டிட நிர்மாணம் மற்றும் இலத்திரனியல் உபகரண பாவனை போன்ற பல பயிற்சிகள் வழங்கப்படுகின்றமை குறிப்பி டத்தக்கது.

அதேபோன்று பலஸ்தீனர்கள் சிறந்த கட்டிடக் கலையுணர்வுள்ள வர்கள் என கூறுவர். இதனை நான் ஹெப்ரூனிற்கு விஜயம் செய்த போது அவதானித்தேன்.

அங்கு இஸ்ரேலிய கெடுபிடிகளுக்கு மத்தியில் மஸ்ஜிதுன் இப்றா ஹீம் பள்ளிவாசலுக்கு அருகில் பஸ்தீனியரொருவரின் கடை காணப் பட்டது. அது மட்பாண்டங்கள் தயாரித்து விற்கும் கடையாகும். குறித்த கடையில் களி மண்ணினை மூலப் பொருளாக பயன்படுத்தி பல அழகிய மட்பாண்டங்கள் தயாரிக்கப்படுவதை அவதானித்தேன்.

குறுகிய நேரத்திற்குள் இந்த மட்பாண்டங்கள் பல்வேறு வடிவங் களில் தயாரிக்கப்பட்டன. அந்த வர்த்தக நிறுவனத்தின் உரிமையாள ருடன் உரையாடினேன்.

'மஸ்ஜிதுன் இப்றாஹீம் அமைந்துள்ள இந்த பிரதேசம் தற்போது சியோனிசர்களின் கட்டுப்பாட்டிலுள்ளது இதில் எனது மூன்றறை களைக் கொண்ட கடை மாத்திரமே பஸ்தீனருக்கு உரியதாகும்.



ஹெப்ரூன் நகரில் யூதர்களினால் அபகரிக்கப்பட்டுள்ள பகுதியில் பலத்த சவால்களுக்கு மத்தியில் மட்பாண்ட தொழிலில் ஈடுபட்டுள்ள பலஸ்தீனர்

இதனை அபகரிப்பதற்காக பல்வேறு கஷ்டங்களை எனக்கு யூதர்கள் வழங்கி வருகின்றனர். உண்மையில் இந்த கடையிலிருந்து வீடு செல்வதற்கு இரண்டு நிமிடங்கள் மாத்திரம்தான் எனக்கு தேவைப்படும்.

ஆனால், என்னை பழிவாங்குவதற்காக குறித்த பாதையினை மூடியுள்ளனர். இதனால் கடையிலிருந்து 20 நிமிடங்கள் நடந்து சென்றே எனது வீட்டை அடைய வேண்டியுள்ளது.

பாருங்கள் அநியாயத்தை. இந்த கடையின் நிலத்திற்காக பல கோடி டொலர் தருவதாக யூதர்கள் விலை பேசுகின்றனர். எத்தனை கோடி தந்தாலும், என்ன கொடுமை செய்தாலும், இந்தக் கடையை நான் மரணிக்கும் வரை அவர்களுக்கு வழங்க மாட்டேன்.

எனது முழுக் குடும்பத்தையும் அழித்து விட்டுத்தான் இந்தக் கடையினை அவர்கள் பெற முடியும்' என மிக உணர்ச்சிவசப்பட்டு தெரிவித்தார். எனது பயணத்தில் சந்தித்த ஒவ்வொரு பலஸ்தீன சகோதர, சகோதரரிகளுக்கு பின்னாலும் இப்படியான பல சோகக் கதைகள் மறைந்து கிடக்கின்றன.

அத்தனை சோகங்களையும் தாங்கிக்கொண்டு இன்றுவரை அந்த மண்ணுக்காக போராடிக் கொண்டிருக்கும் பலஸ்தீன உறவுகளுக்காக பிரார்த்தித்த வண்ணம் அங்கிருந்து நகர்ந்தேன்.

# 07

உனது பெயர் என்ன?

- றிப்தி அலி

நீர் எந்த நாடு?

- இலங்கை

முஸ்லிமா?

- ஆம்.

கடவுச்சீட்டை பார்க்க தாருங்கள் என கட்டளையிடும் தொனியில் தெரிவித்தார் அவர்.

(கடவுச்சீட்டினை பார்த்தவாறு... அல்குர்ஆன் ஓதத் தெரியுமா?

- ஆம்.

ஸூரத்துல் பாத்திஹாவை ஓதுங்கள்.

குறித்த அல்குர்ஆன் ஸூராவை ஓதிக்கொண்டிருந்தபோது, இப்போது உள்ளே செல்ல முடியும் என்றார்.

இஸ்லாத்தின் முதலாவது கிப்லாவும் மூன்றாவது புனித தலமுமான அக்-அக்ஸா பள்ளிவாசலுக்குள் நுழையும்போது எனக்கும் யூத இராணுவ வீரரொருவருக்கும் இடையில் இடம்பெற்ற உரையாடலே இது.

இந்த உரையாடல் மூலம் நீங்கள் இலகுவாக அறியக்கூடிய விடயம்தான் அல்-அக்ஸா பள்ளிவாசலுக்குள் நுழைவதென்றால் யூத இராணுவத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என்பதாகும். அல்லாஹ்வின் புனித இல்லமான பள்ளிவாசலினுள் நுழைவதற்கு ஏன் யூதனின் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற கேள்வி தற்போது உங்கள் மனதில் எழலாம்.

முஸ்லிம்களின் புனித பூமியான பலஸ்தீனத்தின் உண்மையான தலைநகர் ஜெரூஸலம். எனினும் குறித்த நகர் இன்று முழுமையாக இஸ்ரேலியர்களினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

1967ஆம் ஆண்டு நடைபெற்ற யுத்தத்தினை அடுத்து சாக்கடலுக்கு அண்மையிலுள்ள இந்த நகர் இஸ்ரேலியர்களினால் சுவீகரிக்கப்பட்டது. இதனால் இந்த நகரம் இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது. அதாவது பழைய நகர், புதிய நகர் என்றே இரண்டாக பிரிக்கப்பட்டுள்ளது. புதிய நகரில் இஸ்ரேலிய அரசாங்கத்தினால் பாரிய அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனினும் பழைய நகர் இன்றும் பழையதாகவே காணப்படுகிறது. பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்ட இந்நகரிலேயே அக்-அக்ஸா பள்ளிவாசல் உள்ளது. ஜெரூஸலம் நகர் இஸ்ரேலியர்களின் கட்டுப்பாட்டில் காணப்பட்டாலும் இந்த பள்ளிவாசல், இஸ்ரேலின் நிர்வாக எல்லைக்குள் வாழும் முஸ்லிம்களினாலேயே நிர்வகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்துவிற்கு முன் 20ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட இந்த பள்ளிவாசல் 1922ஆம் ஆண்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. ஒரேநேரத்தில் சுமார் 40,000 பேர் தொழுகை நிறைவேற்றக்கூடிய இந்த பள்ளிவாசலுக்கு ஒன்பது வாயிற்கதவுகள் உள்ளன.

இதில் எப்போதும் மூடப்பட்டிருக்கும் மேற்குப்புற வாயிற் கதவின் திறப்பு மாத்திரம் இஸ்ரேலியர்களிடமுள்ளது. இந்த கதவு எப்போது திறக்கப்படும் எப்போது மூடப்படும் என்று யாருக்கும் தெரியாது.

யூதர்கள் விரும்பிய நேரத்தில் திறப்பார்கள், விரும்பிய நேரத்தில் மூடுவார்கள். இந்த வாயிற் கதவு யூதர்களின் முக்கிய தினங்களில் திறக்கப்பட்டு பள்ளிவாசல் வளாகத்திற்குள் யூதர்கள் அனுமதிக்கப்படுவர்.

இதுதவிர்ந்த ஏனைய அனைத்து வாயிற் கதவுகளின் திறப்புகளும் முஸ்லிம்களிடமுள்ளது. எவ்வாறாயினும் ஒன்பது கதவுகளை சுற்றியும் யூத இராணுவத்தினரின் சோதனைச் சாவடிகள் உள்ளன. இதன் காரணமாக யூதர்களின் அனுமதியின்றி யாருமே பள்ளிவாசலினுள் நுழைய முடியாது.


புனித அல் அக்ஸா பள்ளிவாசல் வளாகம்















புனித அல் அக்ஸா பள்ளிவாசல் வளாகத்தில் நிர்மாணிக் கப்பட்டுள்ள குப்பத்துஸ் ஸஹ்றா



புனித அல் அக்ஸா பள்ளிவாசலுக்கு அருகில் யூதர்களினால் சட்டவிரோதமாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மயானம்

ஆனால், பலஸ்தீனர்கள் பள்ளிவாசலுக்குள் நுழைவதற்கு எவ்வித தடைகளுமில்லை. வெளிநாட்டவர்களுக்கே இவ்வாறான தடைகள் காணப்படுகின்றன. பள்ளிவாசலினுள் ஒருவரை அனுமதிப்பதும் அனுமதிக்காததும் யூத இராணுவத்தினரின் விருப்பத்தைப் பொறுத் தது. இதன் காரணமாகவே நான் பள்ளிவாசலினுள் நுழையும் சந்தர்ப் பத்தில் ஸூரத்துல் பாத்திஹாவை ஓதுமாறு பணிக்கப்பட்டேன்.

அச்சமயத்தில் அவர்கள் என்னை உள்ளே அனுமதிக்காவிட்டால் அல்-அக்ஸா பள்ளிவாசலை நான் பார்த்திருக்க முடியாது. எனினும் அல்லாஹ்வின் உதவியினால் அந்த பள்ளிவாசலுக்குள் நுழைந்து இன்று அந்த அனுபவத்தினை உங்களுடன் பகிர்ந்துகொள்ள முடிந்த தையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தப் பள்ளிவாசல் சுபஹ் தொழுகைக்கு திறக்கப்பட்டு இஷா தொழுகையுடன் மூடப்பட்டுவிடும். பள்ளிவாசல் மூடிய பின்னர் இமாம் கூட பள்ளிவாசல் வளாகத்திற்குள் தங்க முடியாதளவுக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக வெள்ளிக்கிழமைகளில் இந்த பள்ளிவா சலுக்குள் நுழைவதற்கு பாரிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. அதாவது வெள்ளிக்கிழமை இடம்பெறும் ஜும்ஆ தொழுகையினை அடுத்து முஸ்லிம்கள் இஸ்ரேலுக்கு எதிரான போராட்டத்தில் ஈடுப டக்கூடும் என்ற அச்சத்தினாலேயே இந்தக் கட்டுப்பாடு விதிக்கப் பட்டுள்ளதாக எனக்கு அறியக் கிடைத்தது.

இந்த கட்டுப்பாடு பலஸ்தீன் மற்றும் வெளிநாட்டவர்கள் என அனைத்து முஸ்லிம்களுக்கும் பொதுவானது. சில வெள்ளிக்கிழமை களில் 65 வயதுக்கு மேற்பட்டவர்களை மாத்திரம் ஜும்ஆவுக்கு அனு மதித்தல் அல்லது பலஸ்தீனர்களை மாத்திரம் அனுமதித்தல் போன்ற தடைகளை மேற்கொள்வர்.

அது மாத்திரமல்ல இந்த பள்ளிவாசலுக்கு தீந்தை பூசுதல், கல்லு டைத்தல், குழாய் பொருத்துதல் உள்ளிட்ட அனைத்து செயற்பாடுக ளுக்கும் யூத அரசாங்கத்தின் அனுமதி கட்டாயம் தேவை.

அவர்களின் அனுமதி பெறப்படாது ஏதாவது செய்யப்பட்டால் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியேற்படும். நான் பள்ளி வாசலுக்கு விஜயம் மேற்கொண்டபோது இதனை அவதானிக்க முடிந் தது. அச்சமயத்தில் யூத இராணுவத்தின் கண்காணிப்புடனேயே பள்ளி வாசலினுள் குழாய் பொருத்தும் செயற்பாடு மேற்கொள்ளப்பட் டதை அவதானித்தேன். இதற்கு பிரதான காரணம் யூதர்களின் சந்தேக குணமாகும்.

இவ்வாறு யூதர்களின் பலத்த கட்டுப்பாட்டுக்குள் அமைந்துள்ள இந்தப் பள்ளிவாசலை அண்டிய பிரதேசத்திலேயே சுலைமான் நபி (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் வாழ்ந்து மறைந்துள்ளார்கள்.

இதனால் அவர்களின் ஜனாஸா உட்பட இன்னும் சில நபிமார் களின் ஜனாஸாக்களும் அல்-அக்ஸா பள்ளிவாசல் வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்த ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்ட இடங்கள் இன்று வரை அல்லாஹுத் தஆலாவினால் பாதுகாக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம்களின் முதலாவது கிப்லா அல்-அக்ஸா பள்ளிவாசல் என்பது அனைவருக்கும் தெரிந்ததேயாகும். எனினும் இந்தப் பள்ளிவாசல் மீது யூதர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இந்த தடயங்களை எனது விஜயத்தின்போது அவதானிக்க முடிந்தது. பள்ளிவாசல் வளாகத்திற்குள் பல முஸ்லிம்கள் யூத இராணுவத்தினரால் ஷஹீதாக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இந்தப் பள்ளிவாசலுக்கு அருகில் யூதர்களின் பாரிய மயான மொன்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. பள்ளிவாசலை சுவீகரிக்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ள இந்த மயானத்தில் இன்றுவரை பல இலட்சக்கணக்கான யூதர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பள்ளிவாசலின் ஒரு பகுதியில் பாரிய மலைக்குன்று உள்ளது. அதிலிருந்துதான் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் இறைவனை சந்திப்பதற்காக புனித மிஃராஜ் பயணத்தினை மேற்கொண்டார்கள் என்பதை அறிந்துகொண்டேன்.

இதன் ஞாபகார்த்தமாக அந்த மலைப்பகுதியில் மினாராவுடனான பள்ளிவாசலொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்தப் பள்ளிவாசலினுள் ஓரிடத்தில் மிஃராஜ் பயணத்தினை மேற்கொள்ள முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் ஆரம்பித்த மலையில் அவரது கால் பாதம் பதிந்துள்ள தடத்தை ஒருவர் காண்பித்தார். அந்த இடம் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். குறித்த இடத்தில் கையை மாத்திரம் வைப்பதற்கேற்ற வகையில் அது அமைக்கப்பட்டுள்ளது. எனினும் அந்த பாதத்தை பார்க்க முடியாத போதும், அதில் கையை வைத்தால்ல் நறுமணம் வீசுகின்றமை குறிப்பிடத்தக்கது.

யூதர்களின் தந்திர முயற்சியின் காரணமாக அல்அக்ஸா பள்ளிவாசல் வளாகத்திற்குள் இரண்டு வேறு பள்ளிவாசல்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. உண்மையான அல்அக்ஸா பள்ளிவாசலை முஸ்லிம்கள் மத்தியில் மறக்கடிக்கச் செய்வதற்காக யூதர்கள் மேற்கொண்ட இம்முயற்சியில் வெற்றியும் கண்டுள்ளனர்.

காரணம், நான் இந்த பள்ளிவாசலினுள் நுழையும் வரை 'குப்பதுஸ் ஸஹ்ரா' என்று அழைக்கப்படும் அழகிய மினாராவுடனான பள்ளிவாசலையே அல்-அக்ஸா என்று நினைத்தேன். ஆனால் அங்கு நுழைந்த பின்னர்தான் அதுவல்ல என்று தெரிந்தது.

பாருங்கள் யூதர்கள் எவ்வளவு தந்திரசாலிகள் என்று.

# 08

பலஸ்தீன் முஸ்லிம்களின் புனித பூமியாக காணப்பட்டாலும் அந்த மண்ணில் கிறிஸ்தவர்கள் வாழ்வதுடன் அவர்களின் முக்கிய தலங்களும் உள்ளன.

நபிமார்களில் ஒருவரான ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களையே கிறிஸ்தவர்கள் இயேசுவாக கருதுகின்றனர். அந்த இயேசுவான ஈஸா (அலைஹிஸ்ஸலாம்) பிறந்ததும் இந்த பலஸ்தீன் மண்ணிலேயாகும்.

பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் மர்யம் அலைஹிஸ்லாம் அவர்கள், ஈஸா (நபி) அலைஹிவஸ்ஸலாம் அவர்களை பலஸ்தீனின் பெத்லஹேம் பிரதேசத்திலுள்ள ஓரிடத்தில் பெற்றெடுத்தார்.

அவர்கள் பிறந்த குறித்த இடம் இன்று பாரிய தேவாலயமாக மாற்றப்பட்டுள்ளது. இந்த தேவாலயத்தின் பெயர் நெத்விட்டி தேவாலயமாகும்.

இது கிறிஸ்தவர்களின் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த தளமாகும். பலஸ்தீனம் ஓர் இஸ்லாமிய நாடென்றாலும் குறித்த நெத்விட்டி தேவாலயம் அந்நாட்டு அரசாங்கத்தினால் முக்கிய கலாசார மையமாக பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

உலகின் கலாசார மையமாக இந்த தேவாலயம் யுனஸ்கோவினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதாவாது பலஸ்தீனில் முதன்முதலாக யுனஸ்கோவினால் பிரகடனப்படுத்தப்பட்ட இடம் இதுவாகும்.

சியோனிச இராணுவத்திற்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையில் பல தடவைகள் இடம்பெற்ற யுத்தத்தின்போது இந்த தேவாலயத்தின் மீது குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முஸ்லிம் பயங்கரவாதிகள் இந்த தேவாலயத்தில் மறைந்துள்ளனர் என்றே தேவாலயத்தின் மீது சியோனிச இராணுவம் தாக்குதல் மேற்கொண்டுள்ளது. எனினும் குறித்த தேவாலயம் பின்னர் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் சியோனிச இராணுவத்தினால் தாக்குதலுக்குள்ளான தடயங்கள் இன்றுவரை தேவாலய நிர்வாகத்தினால்

பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இந்த தேவாலயத்தை யாத்திரிகர்கள் மாலை ஆறு மணி வரை மாத்திரமே பார்வையிட முடியும்.

பலஸ்தீன் செல்லும் சுற்றுலாப் பயணிகள் இன, மத வேறுபாடின்றி அனைவரும் இந்த தேவாலயத்திற்கு விஜயம் மேற்கொள்வர். அந்த அடிப்படையில் இந்த தேவாலயத்திற்கு நானும் விஜயம் செய்தேன்.

பலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டில் இந்த தேவாலயம் காணப்பட்டாலும் இஸ்ரேலிய நகரங்களையும் சோதனைச் சாவடிகளையும் தாண்டியே இந்த நகரிற்குள் பிரவேசிக்க முடியும்.

இந்த தேவாலயத்தினை பார்வையிடுவதற்காக பஸ் வண்டியில் பயணித்துக் கொண்டிருந்தபோது வீதியின் இரு மருங்கிலும் கட்டிடங்களை அவதானிக்க முடிந்தது. எனினும் வீதியின் ஒரு பகுதியில் அழகான கட்டிடங்களையும் மற்றைய பகுதியில் பழைய கட்டிடங்களையுமே காண முடிந்தது.

இது தொடர்பில் பலஸ்தீன் பிரஜையொருவரிடம் வினவினேன். அதற்கு அவர்,

'பலஸ்தீன மக்களின் காணிகளை இஸ்ரேல் கொள்ளையிட்டு இரண்டாக பிரித்துள்ளது. குறித்த இரு பகுதிகளுக்கும் நடுவில் பாரிய வீதிகள் அமைத்துள்ளனர்.

இரண்டாக பிரிக்கப்பட்டு அழகாக புதிய வடிவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீடுகள் இஸ்ரேலியர்களுக்குச் சொந்தமானதாகும். அதே வேளை, பழைய வடிவிலுள்ள கட்டிடங்கள் எமது பலஸ்தீனர்களுடையதாகும்' என்றார்.

அத்துடன் பலஸ்தீனின் பல இடங்களில் உயர்ந்த சுவர்களைக் காணக்கிடைத்தது. பலஸ்தீனர்களிடமிருந்து இஸ்ரேலியர்களால் கொள்ளையடிக்கப்பட்ட நிலத்தின் எல்லைகளிலேயே இந்த உயரமான சுவர் கட்டப்பட்டுள்ளது.

சுமார் ஏழு அடி உயரமான இந்த சுவரை இலகுவில் உடைக்க முடியாதவாறு இஸ்ரேலியர்கள் நிர்மாணித்துள்ளனர். இஸ்ரேலியர்களினால் கொள்ளையடிக்கப்பட்ட காணியினுள் பலஸ்தீனர்கள் நுழைவதை கட்டுப்படுத்தவும் அப்பிரதேசத்தில் இடம்பெறும் நடவடிக்கைகளை பலஸ்தீனர்கள் பார்ப்பதை தடுப்பதற்காகவுமே இந்த




உயர்ந்த சுவர்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

எனினும், பலஸ்தீனர்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தும் வகையிலான வாசகங்கள், சித்திரங்கள் போன்றவற்றை சில சுவர் பகுதிகளில் எழுதியும் வரைந்துமுள்ளமை அவர்களின் உள்ளக் குமுறலை படம்பிடித்துக் காட்டுகின்றது.

இந்த சுவர்களில் தமது கண்டனத்தை வெளியிடவும் சியோனிஸ்டுகள் தடைவிதித்துள்ளனர். சில சமயங்களில் இந்த சுவர்களில் வரைந்தவர்களை இஸ்ரேலியர்கள் கைது செய்ததுமுண்டு.

அந்தளவு பாரிய நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே பலஸ்தீனர்கள் வாழ்கின்றனர். ரமல்லா நகர் பலஸ்தீனர்களின் கட்டுப்பாட்டிலிருந்தாலும் அந்த நகரில் நடைபெறும் அனைத்து விடயங்களையும் அவதானித்தவர்களாகவே இஸ்ரேலியர்கள் உள்ளனர்.

அதேவேளை, ரமல்லாவிலுள்ள ஒரு பலஸ்தீன் பிரஜையினை கைதுசெய்ய வேண்டுமென்று நினைத்தால் இஸ்ரேலிய பொலிஸாரினால் எந்தவித முன்னறிவித்தலுமின்றி கைதுசெய்ய முடியும்.

அதேபோன்று பலஸ்தீன மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான நீர் மற்றும் மின்சாரம் ஆகியவற்றை இஸ்ரேலியர்களிட மிருந்தே பெற வேண்டும். இதற்காக சியோனிச அரசாங்கத்திற்கு பாரிய நிதித் தொகையொன்றினை மாதாந்தம் பலஸ்தீன அரசாங்கம் வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலியர்கள் நினைத்தால் பலஸ்தீனர்களுக்கு வழங்குகின்ற நீர் மற்றும் மின்சாரம் ஆகியவற்றை உடனடியாக நிறுத்த முடியும். அத் துடன் பலஸ்தீனத்திற்கென்று ஒரு நாணய அலகு இல்லை. இதனால் இஸ்ரேலிய அரசாங்கத்தின் நாணயமான செகேலையே அவர்கள் பயன்படுத்துகின்றனர்.

பலஸ்தீன் ஒரு தனி நாடாக காணப்பட்டாலும் இஸ்ரேலிலேயே தங்கி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலியர்களின் தயவின்றி பலஸ்தீனர்கள் வாழ முடியாது என்ற நிலைக்கு பலஸ்தீனர்கள் தள் ளப்பட்டுள்ளமை உண்மையில் மனதை உருக்கும் ஒரு நிலையாகும்.






இதனால் இஸ்ரேலுக்கு எதிராக பலஸ்தீனர்கள் செயற்படமாட் டார்கள் என்ற எண்ணத்தில் பல்வேறு நெருக்கடிகளை பலஸ்தீனர்க ளுக்கு இஸ்ரேலியர்கள் வழங்குகின்றனர்.

இந்த நெருக்கடிகளுக்கு எதிராகவும் பலஸ்தீன பூமி கொள்ளைய டிக்கப்பட்டமைக்கு எதிராகவும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பலஸ்தீனர்களினால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

இந்த ஆர்ப்பாட்டம் ரமல்லாவிற்கு அண்மையிலுள்ள நளின் எனும் பிரதேசத்திலேயே இடம்பெறும். வெள்ளிக்கிழமைகளில் இடம் பெறும் ஜும்ஆ தொழுகையின் பின்னர் இஸ்ரேலுக்கு எதிராக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறும்.

இது, நளின் பிரதேசத்தில் இஸ்ரேலிய அரசாங்கத்தினால் நிர்மா ணிக்கப்பட்டுள்ள உயர்ந்த சுவருக்கு அருகில் நடைபெறும். இதன் போது குறித்த சுவர் மீது பலஸ்தீனர்கள் கல்வீச்சுத் தாக்குதல் மேற் கொள்வதுடன் இஸ்ரேலிய அரசாங்கத்திற்கு எதிரான கோஷங்களை எழுப்புவர்.


எத்தனை கல்வீச்சுக்கள், கோஷங்கள் என பலஸ்தீனர்கள் ஆர்ப்ப ரித்த போதும் அத்தனையும் பயனற்று, சுவரில் எறிந்த பந்துகளாக மீண்டும் அவர்கள் பக்கமே திரும்புகின்றன.



முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மிஃராஜ் பயணம் ஆரம்பிக்கப்பட்ட
இடத்திலுள்ள அவர்களின் பாதத் தடம்



பலஸ்தீன பாரம்பரிய
இசைக் கருவி




பலஸ்தீன கட்டிடக்கலை




பலஸ்தீனில் பயன்படுத்தப்படும் செகேல் எனும் இஸ்ரேல் நாணயம்



பலஸ்தீன் இராணுவம்



பலஸ்தீன கலாசார (நாடக) நிகழ்ச்சி

# 09

'எனது பெயர் பர்வேஷ். பலஸ்தீனின் நெப்லஸ் பிரதேசத்தைச் சேர்ந்த எனக்கு 12 வயதாகும். தரம் இரண்டு வரை மாத்திரமே பாட சாலைக் கல்வியினை கற்ற நான் தற்போது ஆட்டிடையனாக கூலித் தொழில் செய்கின்றேன்' என்றார்.

'பாடசாலை செல்லாமல் ஏன் ஆடுகளை மேய்க்கின்றீர்கள்?' என்று கேட்டேன்.

'அதற்கவர், யூதர்களின் நெருக்கடியினால் எனது குடும்பம் பல் வேறு இன்னல்களை எதிர்நோக்கி வறுமையாக உள்ளது. என்னைப் படிப்பிப்பதற்கு கூட குடும்பத்தில் பணமில்லை,



குடும்பக் கஷ்டத்தினை போக்குவதற்காக ஆடுகளை மேய்க்கும் தொழிலை மேற்கொள்கின்றேன். இதுதான் அல்லாஹ்வின் நாட்டம். நான் என்ன செய்வது' என்றார்.

ரமல்லா நகரத்திலிருந்து சுமார் ஒன்றரை மணித்தியால பிரயாண தூரத்தில் அமைந்துள்ள பின்தங்கிய பிரதேசமே நெப்லஸாகும். இந்த பிரதேசத்திற்கு நான் விஜயம் செய்தபோது குறித்த சிறுவனை சந்தித்தேன்.

பின்தங்கிய பிரதேசமென்பதால் இங்குள்ளவர்கள் பாடசாலைக

ளுக்கு செல்லும் வீதம் மிகக் குறைவாகும். இதனால் இப்பிரதேசத்தின் கல்வியறிவு மிகக் குறைவாகும். இங்குள்ள ஆண், பெண்களில் அதிகமானவர்கள் ஆடு மேய்த்தல் போன்ற கூலித்தொழில்கள் மேற்கொள்பவர்களாகவே காணப்பட்டனர்.





பலஸ்தீனர்களில் அதிகம் கல்வி கற்பவர்களாக பெண்களே காணப்படுகின்றனர். ஆண்கள் அடிக்கடி இஸ்ரேலியர்களினால் கைது செய்யப்படுவதனால் அவர்கள் கல்வி கற்கும் வீதம் குறைவாக காணப்படுகிறது.

இதேவேளை, பலஸ்தீனர்களின் பல்கலைக்கழகம் சிறைச்சாலை என்றால் அது மிகவும் பொருத்தமானதாக இருக்குமென நினைக்கின்றேன். ஏனென்றால், அடிக்கடி கைது செய்யப்படுவதனால் பலஸ்தீன ஆண்கள், சிறைச்சாலையில் அதிகம் படிப்பார்கள். இதனால் சிறைச்சாலைகளிலிருந்து பலர் நூல்கள் எழுதியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அரபு மொழியை தாய் மொழியாகக் கொண்ட பலஸ்தீனம், இஸ்ரேலியர்களினால் எவ்வளவு நசுக்கப்பட்டாலும் பலஸ்தீனத்தில் இலவசமாகவே கல்விச் சேவை அந்நாட்டு அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது.

இதனால் பலஸ்தீன் சிறுவர்கள் ஆறு வயது முதல் பாடசாலை செல்ல ஆரம்பிப்பர். தரம் ஒன்று முதல் ஒன்பது வரையான கல்வி நடவடிக்கைகள் ஐக்கிய நாடுகளின் நிவாரண உதவி முகவரகத்தின் உதவியிலும் தரம் 10 முதல் 12 வரையான கல்வி நடவடிக்கைகள் பலஸ்தீன அரசாங்கத்தினால் நிதி வழங்கப்பட்டும் இடம்பெறுகின்றது.

அத்துடன் பெண்களுக்கென்று தொழிற் பயிற்சியுடன் கூடியதான தனியான பாடசாலையொன்றை எனது விஜயத்தின்போது அவதானிக்க முடிந்தது. பலஸ்தீனத்தில் அரசாங்க மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் உள்ளன. இங்கு மருத்துவம், சட்டம், மனித உரிமை உள்ளிட்ட சுமார் நான்கு தொடக்கம் ஆறு வருடங்கள் கொண்ட கற்கைநெறிகள் உள்ளன.

பெரும்பாலும் வெள்ளிக்கிழமைகளிலேயே பலஸ்தீனத்தில் விடுமுறை வழங்கப்படுகின்றது. எனினும் பாடசாலைகளுக்கு வெள்ளி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களிலேயே விடுமுறையாகும்.

அங்கு வாழும் கிறிஸ்தவர்களின் நன்மை கருதியே ஞாயிற்றுக்கிழமைகளில் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளன. அதாவது, பலஸ்தீனத்தில் இரண்டு சதவீதம் கிறிஸ்தவர்கள் காணப்பட்டாலும் அவர்களுக்கான பூரண சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் பலஸ்தீன பாராளுமன்றத்தில் ஐந்து கிறிஸ்தவ பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும், ஜெரூஸலம் யூதர்களின் கட்டுப்பாட்டில் இருப்பதனால் அங்கு சனிக்கிழமைகளில் விடுமுறையாகும். அதாவது இஸ்ரேலில் சனிக்கிழமை விடுமுறையாகும்.

பலஸ்தீனத்திற்கென்று தனியான நாணய அலகொன்று இல்லாவிட்டாலும் பலஸ்தீன் முதலீட்டு வங்கி, அரபு இஸ்லாமிய வங்கி, குத்ஸ் வங்கி மற்றும் பலஸ்தீன் வர்த்தக வங்கி என சில வங்கிகளை அங்கு காணமுடிந்தது.



யூதர்களின் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழும் பலஸ்தீனர்கள் இஸ்ரேலியர்களின் அனுமதியின்றி நாட்டை விட்டு வெளியேற முடியாது. நான் சந்தித்த வாகன சாரதியொருவர் பின்வருமாறு தெரிவித்தார்.

'எனது வயது 33. ஒரு தடவை கூட நான் வெளிநாடு சென்றதில்லை. காரணம் பலஸ்தீனர்கள் வெளிநாடு செல்ல இஸ்ரேலியர்கள் அனுமதிப்பதில்லை.

அவர்களின் அனுமதியின்றி யாரும் பலஸ்தீன் நுழையவும் முடியாது; வெளியேறவும் முடியாது. காரணம் அலன் பிரிஜ் சோதனைச் சாவடி அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ளமையாகும்.

பலஸ்தீனர்கள் வெளிநாடு செல்வது என்றால் யூத அரசாங்கத்திடம் விண்ணப்பிக்க வேண்டும். அதன் பின்னர் ஒரு தொகை கட்டணம் செலுத்த வேண்டும். யூதர்கள் விரும்பினால் மாத்திரம் பலஸ்தீனர்களை வெளிநாடுகளுக்கு செல்ல அனுமதிப்பர். இல்லாவிட்டால் நாட்டை விட்டு வெளியேற முடியாது.

இந்த கட்டுப்பாடு பலஸ்தீன கடவுச்சீட்டினை வைத்திருப்பவர்களுக்கு மாத்திரமேயாகும். இதனால் பெரும்பாலான பலஸ்தீனர்கள் - ஜோர்தான், பலஸ்தீன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் கடவுச்சீட்டுகளை கொண்டிருப்பர். அமெரிக்கா மற்றும் ஜோர்தான் ஆகிய நாடுகளில் குடியுரிமையினை பெற்றால் மாத்திரமே இந்த வசதியைப் பெறமுடியும்.




அதேபோன்று பலஸ்தீனர்கள் - பலஸ்தீன் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளின் அடையாள அட்டைகளைக் கொண்டிருப்பர். அதாவது இஸ்ரேலின் கட்டுப்பாட்டிலுள்ள ஜெரூஸலம் நகரில் பலஸ்தீன முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

எனினும் இவர்கள் அங்கு விருந்தினர்களே தவிர இஸ்ரேலிய பிரஜாவுரிமையோ குடியுரிமையோ அந்நாட்டு அரசாங்கத்தினால் வழங்கப்பட மாட்டாது. எனினும் இஸ்ரேலிய அடையாள அட்டை மாத்திரம் ஜெரூஸலத்தில் வாழும் பலஸ்தீனர்களுக்கு வழங்கப்படும்.

இந்த அடையாள அட்டையினை கொண்ட பலஸ்தீனர்களுக்கு பல சலுகைகளை இஸ்ரேல் அரசாங்கம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதாவது இஸ்ரேலிய அடையாள அட்டையை கொண்ட பலஸ்தீனர்களுக்கு இஸ்ரேலிய வைத்தியசாலைகளில் இலவச வைத்திய சேவை வழங்கப்படும். அதேபோன்று இஸ்ரேலிய வீதிகளில் வாகனங்கள் செலுத்தக்கூடிய வசதி, தொழில் செய்தல், இஸ்ரேலிய நிறுவனங்களில் கடமையாற்றல் உள்ளிட்ட பல வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இஸ்ரேலிய நகரங்களில் பலஸ்தீனியர்களின் வாகனங்கள் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, இஸ்ரேலிய வாகனங்கள் பலஸ்தீன நகரங்களில் பயணிக்க முடியும்.



இங்கு பலஸ்தீன மற்றும் இஸ்ரேலிய வாகனங்களை அடையாளம் காண்பது மிகச் சிரமமாகும். இதனால் இஸ்ரேலிய வாகனங்கள் மஞ் சள் அல்லது கறுப்பு நிற வாகன இலக்கத் தகட்டினையும் பலஸ்தீன வாகனங்கள் பச்சை அல்லது வெள்ளை நிற வாகன இலக்கத் தகட்டி னையும் கொண்டிருக்கும்.

அத்துடன் பலஸ்தீன் வாகனங்களுக்கு *1-4-2* என்ற அடிப்படையில் பதிவு இலக்கமும் இஸ்ரேலிய வாகனங்களுக்கு *2-3-2* என்ற அடிப்ப டையில் பதிவு இலக்கமும் வழங்கப்பட்டிருக்கும்.




அதேவேளை, பலஸ்தீனத்திற்கென்று பஸ் சேவையொன்றில்லை. சிறிய ரக வேன்களே நகரங்களுக்குட்பட்ட பிரயாண சேவையில் ஈடு படுத்தப்படுகின்றன. ஆனால், இஸ்ரேலில் அதிசொகுசு பஸ்கள் மற் றும் கேபிள் பஸ் சேவையினை காண முடிந்தது.

எனினும் இஸ்ரேலின் சில பகுதிகளில் முஸ்லிம்கள் வாழ்கின்ற மையினால் முஸ்லிம்களுக்கும் யூதர்களுக்கும் வெவ்வேறான பஸ் சேவை காணப்பட்டது. அதாவது முஸ்லிம்களும் யூதர்களும் ஒரு பஸ்ஸில் பயணிக்கும்போது பிரச்சினைகள் ஏற்படும் என்ற அச்சத்தி னாலேயே வெவ்வேறான பஸ் சேவை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பலஸ்தீனர்களின் தேசிய விளையாட்டு கால்பந்தாகும். எனினும் கால்பந்து விளையாடுவதற்கு அங்கு மைதானமில்லை. பலஸ்தீனர்க ளின் கால்பந்து மைதானத்தினை இஸ்ரேல் விமான நிலையமாக மாற் றியுள்ளதுடன் அங்கு புதிதாக மைதானம் அமைக்கவும் இஸ்ரேல்

அனுமதி வழங்கவில்லை.



பலஸ்தீன மக்களுக்கு எதிராக போராடுவதற்கு தேவையான ஆயுத பயிற்சிகளை வழங்குவதற்காக இஸ்ரேலியர்கள் கட்டாயம் இராணுவ பயிற்சி பெற்றிருத்தல் அவசியமாகும். ஆண்களுக்கு மூன்று மாதங் களும் பெண்களுக்கு இரண்டு மாதங்களும் இந்த இராணுவ பயிற்சி வழங்கப்படுகிறது.

பலஸ்தீனர்களுக்கு இது போன்ற எந்தவொரு பயிற்சிகளுமில்லை. ஆனால், சிறுவர்களுள்ள பலஸ்தீன வீட்டில் நிச்சயமாக விளையாட்டு துப்பாக்கி காணப்படும். யூதர்களுக்கு எதிராக சிறு வயதிலிருந்து தயார்படுத்துவதற்காகவே இவர்களுக்கு இவ்வாறான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இலங்கை மற்றும் சீனா உட்பட சுமார் 37 நாடுகளின் தூதுவரால யங்கள் பலஸ்தீனத்தில் உள்ளன. இலங்கை தூதுவராலயம் 2007.10.14 ஆம் திகதி ரமல்லா நகரில் திறக்கப்பட்டது.

இதனையடுத்து பலஸ்தீனுக்கு ஆதரவாக இலங்கையில் செயற் பட்டவர்களில் ஒருவரான வைத்தியர் திஸ்ஸ ஜயசிங்க முதலாவது தூதுவராக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக் கப்பட்டார்.

இதேவேளை, ரமல்லா நகரிலுள்ள வீதியொன்றுக்கு 2007.11.18 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெயர் சூட்டப்பட்

டுள்ளது குறிப்பிடத்தக்கது. பலஸ்தீனத்திற்காக மஹிந்த ராஜபக்ஷ சுமார் 30 வருடங்கள் குரல் கொடுத்தமைக்கு நன்றி தெரிவிப்பதற்காகவே அவரது பெயர் வீதியொன்றுக்கு சூட்டப்பட்டுள்ளது.

மேலும் தற்போது பலஸ்தீனுக்கான இலங்கையின் பதில் தூதுவராக அட்டாளைச்சேனையை சேர்ந்த சிராஜ் அஹமட் செயற்படுகின்றார்.

இவ்வாறான பல்வேறு சிறப்பம்சங்கள், சுவாரஷ்யங்கள் மற்றும் சொல்லொணா துயரங்களையும் சுமந்திருக்கும் புனித மண்ணிலிருந்து மிகக் கவலையுடன் வெளியேறும்போது பல்வேறு இன்னல்களை யூதர்களினால் எதிர்நோக்க நேரிட்டது.

யூதர்களின் கட்டுப்பாட்டிலுள்ள அலன் பிரிஜினை விட்டு வெளியேறும் போதே இந்த சிரமத்தினை எதிர்நோக்கினேன். அலன் பிரிஜ் மற்றும் பலஸ்தீனத்தின் பல பிரதேசங்களில் அரபு இனத்தை சேர்ந்த இஸ்ரேலிய உளவாளிகளும் செயற்படுகின்றமை இங்கு முக்கிய விடயமாகும். யூதர்களின் செகேலுக்காக இவர்கள் சமூகத்தை காட்டிக்கொடுக்கின்றமை மிகவும் வேதனைக்குரிய விடயம்.

பலஸ்தீனத்தின் பல நகரங்களைப் பற்றி குறிப்பிட்ட நான், ஏன் காஸாவை பற்றி குறிப்பிடவில்லை என்று நினைக்கலாம்.

பலஸ்தீனின் ஒரு நகராக காஸா காணப்பட்டாலும் ரமல்லாவிலிருந்து அந்த நகருக்கு செல்வதற்கான தரைமார்க்க பாதை யூதர்களினால் மூடப்பட்டுள்ளது. அவர்களின் அனுமதி பெற்ற முக்கிய சிலர் மாத்திரமே அந்த வழியின் ஊடாக செல்ல முடியும்.

ஏனையவர்கள் அலன் பிரிட்ஜின் ஊடாக ஜோர்தான் சென்று, அங்கிருந்து விமானத்தில் எகிப்தின் தலைநகரான கெய்ரோ சென்று தரைமார்க்கமாக ரபா வாயிலாகவே காஸாவினை சென்றடைய முடியுமே தவிர, வேறெந்த வழிகளும் காஸாவுக்காக திறக்கப்படவில்லை.



நிப்தி அலி கல்முனையை பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிட மாகவும் கொண்ட ஓர் இளம் ஊடகவியலாளர் மட்டுமல்ல, பன்முக ஆளுமை கொண்ட ஓர் இளம் சமூகத் தலைமை. எழுத்து, பேச்சு, தொடர்பாடல் முதலான ஆற்றல்களை ஒரு சேரப் பெற்றுள்ள நிப்தி அலி தலைமைத்துவ பண்புகளையும் நிறைவாக பெற்றவராவார்.

இளம் வயதிலேயே ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தேசிய அமைப்பாளராகவும் பின்னர் அதன் பொதுச் செயலாளராகவும் நிப்தி அலி தெரிவு செய்யப்பட்டமைக்கு இவரது பன்முக ஆளுமையே காரணமாக அமைந்தது எனக் குறிப்பிட்டால் அது மிகையாகாது. கனணி, ஊடகவியல் உட்பட மற்றும் பல துறைகளில் பல பாட நெறிகளை பூர்த்திசெய்தவர் இவர். தமிழ் மொழியில் புலமை பெற்றுள்ள இவர், ஆங்கில மொழி அறிவையும் வளர்த்துக் கொண்டுள்ளார். தற்போது சமூகவியல் துறையில் ஒரு பட்டப்படிப்பை மேற்கொண்டு வரும் இவர் இத்துறையில் இறுதி ஆண்டு மாணவராக இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஸஊதி அரேபியா, பலஸ்தீனம், ஈரான், அமெரிக்கா, இந்தியா முதலான நாடுகளுக்கு இளவயதிலேயே விஜயங்களை மேற்கொண்டு தனது அறிவையும், அனுபவத்தையும் வளர்த்துக் கொண்டார் நிப்தி அலி.

ஏலவே ஒரு நூலினை இவர் எழுதியுள்ளார். இவரது மற்றுமொரு ஆக்கமே உங்களது கரங்களில் தவழும் 'களவாடப்பட்ட பூமியின் கதை'. இது ஒரு பயணக் கட்டுரை. ஆயினும், ஒரு பயணக் கட்டுரைக்கூடாக சர்வதேச முஸ்லிம் உம்மாவின் முதல் தர பிரச்சினைகளில் ஒன்றான பலஸ்தீன விவகாரத்தின் பக்கம் வாசகரின் கவனத்தை ஈர்க்கின்ற ஒரு தார்மீக கடமையை நிறைவேற்ற முயற்சி செய்துள்ளார். இம்முயற்சியில் அவர் பெரிதும் வெற்றி பெற்றுள்ளார் என நான் நம்புகிறேன். பலஸ்தீன மக்களின் அவலத்தை உணர்ச்சிபூர்வமாக முன்வைக்கும் இவ்வாக்கம் இஸ்ரவேலும், யூத ஸியோனிஸவாதிகளும் பலஸ்தீன மண்ணில் அரங்கேற்றும் அராஜகத்தையும், அநீதியையும், அட்டூழியங்களையும் தான் கண்ட அனுபவங்களாகவும், சுய சாட்சியங்களாகவும் பதிவு செய்துள்ளார்.

இவ்வாக்கம் காஸாவின் கண்ணீர் கதையை சொல்லத் தவறியிருக்கிறது. காஸாவுக்கு செல்லும் வாய்ப்பு நூலாசிரியருக்குக் கிட்டாமையே அதற்கான காரணமாகும் என்பதை அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாக்கத்தின் தொடராக உலகின் திறந்த வெளிச் சிறைச்சாலையாக அமைந்திருக்கின்ற காஸா பற்றிய கதையையும் தமிழ் பேசும் உலகத்துக்கு இவர் எடுத்துச் சொல்ல வேண்டும் என்பது எனது அவாவாகும்.

இவரது எழுத்துப் பணி தொடர வாழ்த்துகிறேன். பிரார்த்திக்கிறேன்.

**அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத்**
**பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்**
**பிரதித் தலைவர், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா**

9 789554 054004 >